மாலைமணி

ஆசிரியர் : பி. எஸ். இளங்கோ

காங்கிரசுக்கு 'அரியலூர் விபத்து'!

அரியலூர் விபத்துக்கு காரணமாக இருந்த ஓ. வி. அளகேசன், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது—வரும் தேர்தலில் காங்கிரசுக்கும் 'அரியலூர் விபத்து' ஏற்படுவதற்கு முன்னறிவிப்போ என்று சந்தேகிக்கிறார் நமது சித்திரக்காரர்!

மாலைமணி!

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 27—12—59 ஒலி 9

அனைவரும் ஒன்றுபட அண்ணா அழைக்கிறார்!

சென்னையில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் நமது அறிஞர் அண்ணா அவர்கள் "எல்லாக் கட்சித் தோழர்களும் ஒன்றுபட்டு, கூட்டணி அமைத்து மத்திய சர்க்காரின் அதிகாரங்களை குறைக்க பாடுபட வேண்டும்" என்று ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார்!

"மத்திய சர்க்காரின் அதிகாரங்களை குறைக்க வேண்டுமானால், இந்த நாட்டின் அரசியல் சட்டத்தையே மாற்றியாக வேண்டும். இதை நமது தேர்தல் கோரிக்கையாக வைத்துப் போட்டியிட வேண்டும்! இது எந்தக் கட்சிக்கும் சொந்த கோரிக்கையாக இருக்காது" என்று நல்ல விளக்கவுரையாற்றி எல்லா கட்சியினரையும் அழைத்திருக்கிறார்! இதை ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவர்களும் சிந்தித்துப் பார்த்து நல்லதொரு முடிவுக்கு உடனடியாக வர வேண்டும்!

அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கூட்டத்திலேயே எடுத்துக் காட்டியது போல்—தமிழகத்தை எந்த கட்சி ஆண்டாலும், அதிகாரத்தோடு கூடிய கொற்றத்தில் அமர்ந்தால் தான் பல நல்ல பணிகளை செய்ய முடியும்! இது தமிழகத்திற்கு மட்டுமல்ல எல்லா மாநிலங்களுக்குமே பொருந்தும்!

கம்யூனிஸ்டு கட்சி ஆட்சிக்கு வந்தாலும், சோஷலிஸ்டு கட்சி செங்கோல் செலுத்தினாலும், அல்லது ஆச்சாரியார் கட்சியே கொலு மண்டபத்தில் அமர்ந்தாலும்—டில்லியிலே அதிகாரங்கள் அனைத்தும் குவிந்திருக்கிற வரையில் வெறும் கொலுப் பொம்மைகளாகத் தான் இருக்க முடியும்!

பொதுவுடமை பேசும் ஜீவானந்தம் முதலமைச்சரானாலும், தனிவுடமைப் பேசும ஆச்சாரியார் முதல்வரானாலும், அல்லது சின்னச்சாமியே முதல்வரானாலும் இன்று காமராஜர் என்ன செய்து வருகிறாரோ அதையேத் தான் செய்ய முடியும்! முதலமைச்சர் ஜீவானந்தம் பொதுவுடமையைப் பரப்பினால் டில்லியின் அதிபர் நேரு பெருமகனால் டிஸ்மிஸ் செய்யப்படுவார்! ஆச்சாரியார் தனிவுடமையே சாலச் சிறந்தது என்று சொன்னால் அடுத்த வினாடியே பதவி நாற்காலிப் பிடுங்கப்பட்டு விடும்!

இந்த உண்மை மற்ற கட்சித் தலைவர்களைக் காட்டிலும் நண்பர் ஜீவானந்தம் அவர்கட்கு தெளிவாகத் தெரியும்—அதிகம் தெரியும்—அனுபவ பூர்வமாகவும் தெரியும்!

"பாரதம் ஒன்று, கூடி வாழ்வதே நன்று" என்ற தாரக மந்திரத்தை விடாமல் ஜெபித்து வருகின்ற கம்யூனிஸ்டு கட்சி நம்பூதிரி தலைமையில கேரளத்தின் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதும், முடிவில் அது முடிசாய்ந்துபோனதும் உலகமறிந்த உண்மையாகும்!

கேரளத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டு ஆட்சி அழிந்து போனது ஏன்? கம்யூனிஸ்டு ஆட்சியின் வாழ்வு எப்படி அழிந்தது? டில்லியிலே அதிகாரம் இருக்கின்ற காரணத்தால் தானே கேரளத்திலே இந்த கோர நிகழ்ச்சி நடைபெற்றது! நாளைய தினம் தமிழகத்திலும் இந்த சம்பவம் நடை பெறாது என்பதற்கு என்ன சான்று இருக்கிறது!

இப்போதிருக்கின்ற கட்சிகள்—எந்த கட்சிகளானாலும் டில்லியின் அதிகாரத்தைக் குறைக்கா விட்டால்—நிச்சயமாக தன் கொள்கைகளை, இலட்சியங்களை நிறைவேற்ற முடியவே முடியாது!

எனவே எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு டில்லியிலே இருக்கின்ற அதிகாரங்களை குறைத்து—மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெற பாடுபட வேண்டும்!

டில்லியின் அதிகாரங்களைக் குறைப்பது எளிதான காரியமல்ல! இதற்குப் பெரும் சாதனைகளை சாதித்தாக வேண்டும்! அதிகமாக விலையைத் தர வேண்டும்!

இதற்கான நல்ல வாய்ப்பை பொதுத் தேர்தலிலே நாம் பெற்றாக வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது!

தமிழகத்திலே இருக்கின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு பொதுத் தேர்தலிலே ஈடுபட்டால் நிச்சயமாக அடுத்த மந்திரி சபை காங்கிரஸ் மந்திரி சபையாக இருக்கவே முடியாது!

காங்கிரஸ் கட்சிக்கு எவ்வளவு தான் பணபலமிருந்தாலும், பத்திரிகை பலம் இருந்தாலும்—நாம் ஒன்றுபடுவோமானால் அது ஒழிந்துவிடும்! இதற்கு சாட்சியும், உதாரணமும் தேவை என்றால் சென்னையில் நடைபெற்ற மேயர் தேர்தலே போதும்!

பணம் ஒன்றை மட்டுமே நம்பி மேயர் தேர்தலில் குதித்த காங்கிரஸ் கட்சியை தோற்கடித்ததெப்படி? நாமும் கம்யூனிஸ்டுகளும் ஒன்றுபட்டோம்—சென்னை நகர சபையின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரஸ் கட்சியை விரட்டி யடித்தோம்! ரிப்பன் கட்டிடத்திலிருந்து காலி செய்ய வைத்தோம்!

இதே முறையை அடுத்தத் தேர்தலிலும் கடைபிடிப் போமானால் காங்கிரஸ்காரர்களை கோட்டையிலிருந்தும் விரட்டியடிக்க முடியும்! நிச்சயமாக முடியும்!

பொதுப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒன்றுபடுவதில் தவறொன்றுமில்லை! நாம் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்தாலும், கம்யூனிஸ்டுகள் நம்மோடு சேர்ந்தாலும் ஒருவரோடு ஐக்கியமாகி விட மாட்டோம்!

நம்முடைய இலட்சியம் சமதர்ம திராவிட கூட்டாட்சி அமைப்பது! அவர்களுடைய இலட்சியம் அகண்ட நிலத்தில் பொதுவுடமையைப் பூக்கச் செய்வது! இதில் ஒன்றும் மாற்ற மிருக்காது! மாற்றமும் தேவையில்லை!

கொள்கை வேறுபட்டவர்களோடு எப்படி ஒன்று சேர முடியும்—சேரலாம் என்று கேட்கலாம்! காங்கிரஸ்காரர்கள் கேட்பதாகவும் தெரிய வருகிறது! காங்கிரஸ்காரர்கள் மட்டும் கேரளத்திலே எப்படி ஒன்று சேர்ந்தார்கள்? ஏன் ஒன்று சேர்ந்தார்கள்! இதை காங்கிரஸ்காரர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும்! வடக்கே பார்க்கும் காங்கிரஸ்கட்சியும், தெற்கு நோக்கிநிற்கும் மற்றகட்சிகளும் ஒன்று படக் காரண மென்ன? "உனக்கு இத்தனை ஸ்தானங்கள், எனக்கு இத்தனை ஸ்தானங்கள்" என்று பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் கேரளத்தில் ஏற்படக் காரணமென்ன? மீண்டும் கம்யூனிஸ்ட்டு ஆட்சி வரக்கூடாது என்பதற்காகத் தானே! மீண்டும் நம்பூதிரி முதல்வராக ஆட்சி பீடம் ஏறக் கூடாது என்பதற்காகத் தானே? இதே காரணத்திற்காகத் தான் நாங்களும் ஒன்று பட விரும்புகிறோம்!

நாடு நலம் பெற, நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற—இதற்கான பணிகளை தங்கு தடங்கலின்றி செய்ய எல்லா எதிர்கட்சிகளும் ஒன்றுபட்டுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியை முறியடிக்க வேண்டும்!

இதற்கான திட்டங்களை எல்லா கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து வகுக்க வேண்டும்! இந்த ஆக்க வேலையில் எல்லா கட்சித் தலைவர்களும் உடன்டியாக கவனத்தைச் செலுத்திட வேண்டும்!

நம்முடைய கழகத் தொண்டர்களும் இன்று முதலே இந்தப் பணியிலே இறங்க வேண்டும்! ஒவ்வொரு தொகுதியிலும் கிளைக் கழகங்கள், படிப்பகங்கள் ஏராளமாக இருக்கின்றன! அந்தந்த வட்டாரத்திலே இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கையும், வாக்காளர்களின் தொகையையும் கிளைக் கழக நண்பர்களின் கையிலே பட்டியலாக இருக்க வேண்டும்! "எந்தெந்தத் தெருவில எத்தனை எத்தனை வீடுகள் இருக்கின்றன, அங்கே எத்தனை வாக்காளர்கள் வசிக்கின்றனர்" என்பதை பெயர் வாரியாக நாம் பட்டியல் தொகுக்க வேண்டும்! சுருக்கமாகச் சொன்னால் இன்னும் இரண்டாண்டு காலம் வரை நமது கிளைக் கழகங்கள் அத்தனையும் சென்சஸ் ஆபீசாகவும், தேர்தல் அலுவலகங்களாகவும்—அதே நேரத்தில் நமது கொள்கை பிரச்சார சாதனமாகவும் இருக்க வேண்டும்!

எல்லோரும் கடுமையாக உழைத்தால் வெற்றி நிச்சயமாக உண்டு என்பதை மனதில் வைத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும்!

அண்ணா விடுத்த அழைப்புக்கு பலனைத் தேடித் தர எல்லா கட்சி நண்பர்களும் செயல்பட வேண்டும்!

பெரியாரின் அன்புவலையில்விழாத நான் ராஜதந்திர வலையில் மட்டும் வீழ்வேனா?

'வேடன் விரித்த வலையில் மான் விழுந்தால் தப்பாது காளை விழுந்தால் வலை அறுபடும் - நிலைக்காது!'

அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை, ராயப்பேட்டையில் மேயர், துணை மேயர் பாராட்டு விழா கடந்த 19-12-59 அன்று தோழர் எஸ். கே. முனுசாமி தலைமையில் நடைபெற்றது.

வட்டார நகராட்சி மன்ற உறுப்பினர் டி. என். கிருஷ்ணன் பேசுகையில், தொகுதி மக்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்து கொடுப்பதே தன் லட்சியமென்று கூறினார்.

அடுத்து நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசுகையில் காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து மேயர் தேர்தலில் வெற்றி பெற்றோமென்றும், மாற்றுக் கட்சிக்காரர்களின் தில்லுமுல்லுகளை முறியடிக்க அறிஞர் அண்ணாவின் திட்டப்படி நடக்க தோழர்கள் ஒத்துழைத்தார்கள் என்றும், கார்ப்பரேஷனில் வெற்றிபெற்ற மேயர், துணை மேயர் வெற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி என்றும், திராவிட நாடு திராவிடருக்கே என்னும் லட்சியத்திற்கு கிடைத்தவெற்றி என்றும் கூறி மேயரையும், துணைமேயரையும்பாராட்டினார்.

அடுத்து, சட்ட மன்ற உறுப்பினரான ஏ. வி. பி ஆசைத்தம்பி அவர்கள் பேசுகையில், 'எதிர்க்கட்சிகள் கூட்டணியாக சேர்ந்து பொதுத் தேர்தலில் எதிர்த்தால் காங்கிரஸ் தோல்வி அடையுமென்றும், திராவிட நாடு பிரச்னை வெற்றி பெற்றால் தான் மக்கள் குறைகள் அனைத்தும் நீங்குமென்றும், இப்போதுள்ள அடிமை நிலையை மாற்றவேண்டுமென்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியமென்றும் கூறினார்.

பின்னர் மேயருக்கும், துணை மேயருக்கும் பாராட்டு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்து துணை மேயர் திரு. தேவராசன் அவர்கள் பேசுகையில்:-

"என் தொகுதியான ஷெனாய் நகருக்கு செய்த நன்மைகளைப் போலவே, எல்லா தொகுதிகளையும் என்னுடைய தொகுதி என்று நினைத்து அவைகளின் முன்னேற்றத்திற்கு பாடுபடுவேன்" என்று உறுதி அளித்தார்,

அடுத்து மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், குடிசை வாழ்வோர், நடைபாதை வாசிகளின் துயரைத் துடைப்பதே தன் லட்சியம் என்றும், தன் பதவி காலத்திற்குள்ளேயே அவர்கள் துயரைத் துடைக்க வழிவகை செய்வதாகவும் உறுதி கூறி, பாராட்டு அளித்தவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது:

அன்புள்ள தலைவரவர்களே! அருமை நண்பர்களே!

நம்முடைய நண்பர் அப்துல் காதர் மாநகராட்சி மன்றத் தலைவராகவும், மற்றொரு நண்பர் தேவராசன் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல பணியினை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்கவும், அவர்களை மக்கள் கவனித்து வருகிறார்கள் என்று கவனப்படுத்துவதற்கும் நாள்தோறும் நம்முடைய கழகத் தோழர்கள்இத்தகைய பாராட்டு விழாக்களை ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

இப்படிப்பட்ட பாராட்டு விழாக்களை காணுகின்ற காங்கிரஸ்காரர்களுக்கு அருவெறுப்பாகவும் ஆயாசமாகவும் இருக்கிறது!

சில வேளைகளில் அவர்கள் ஆயாசமடைகிறார்கள்! சில வேளைகளில் அருவெறுப்படைகிறார்கள்!

மேயரான அப்துல்காதருக்கும், துணை மேயரான தேவராசனுக்கும் பாராட்டு தருவது அவர்களுக்கு உண்மையிலேயே வேதனையாக இருக்கக்கூடும்.

மேயருக்கும், துணை மேயருக்கும் பாராட்டு அளிப்பதின் நோக்கம், அவர்களின் திட்டங்களுக்கு பக்கத் துணையாக இருப்போம் என்று உறுதி அளிக்கவும். நல்ல காரியங்களில் ஈடுபட அவர்களுக்கு உற்சாகமளிக்கவும்தான்!

'இதற்காக்வா பாராட்டு? ஏன் பாராட்டு' என்று காங்கிரஸ்காரர்கள் கூறினால் நாம் வருத்தப்படத் தேவையில்லை.

'சாதாரண மேயர் பதவிக்கு இத்தனை அமர்க்களமா? நாங்கள், இந்தியாவில் எத்தனை ராஜ்யங்கள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் கட்டியாளுகிறோம். நாங்கள் இப்படியா கொண்டாடுகிறோம், அமர்க்களப்படுத்துகிறோம்' என்று கூறி மன ஆறுதல் அடைகிறார்கள்.

நாம் அடைந்திருக்கும் இந்த வெற்றி புதிய பெருமை அல்ல! மக்களிடையே நேரடி தொடர்பு கொள்ளவும், மக்களுக்கு நம்பிக்கை தெரிவிக்கவும், நல்லெண்ணத்தை வளர்க்கவும் உழைப்பேன் என்று வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கும் நேரத்தில் மேயர் அவர்கள் சொன்னார்கள்.

துணை மேயர் சார்ந்திருக்கும் வட்டத்தில் மின்சார விளக்கு திட்டம் நிறைவேற்றி இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய சீரிய முயற்சிக்கும், திட்டத்திற்கும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் நல்ல ஆரோக்கிய வசதி ஏற்படுவதற்கும், மின்சார ஒளி பரப்பவும், அறிவு ஒளி பரப்பவும் மேயரும், துணை மேயரும் ஆற்றுகின்ற பணிக்கு நீங்கள் துணையாக இருக்க வேண்டுமென்று எல்லா நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன்!

இதற்கு முன்னாலே இருந்த மேயரும், இங்கிருக்கும் நண்பர்கள் அப்துல்காதரும், தேவராசனும் நாள்தோறும் பல்வேறு இடங்களை பார்வையிட்டு வருகின்றனர். குறிப்பாக ஏழைகள்

(10-ம் பக்கம் பார்க்க)

ஏசுவோர் ஏசட்டும்! தூற்றுவோர் தூற்றட்டும்! நாம் வாழ்வோம் — அவர்கள் வீழ்வார்கள்!

மாற்றார் ஏசுவதைக் கேட்டு மனந்தளராதீர்!

மேயர் பாராட்டு விழாவில் நாவலர் நெடுஞ்செழியன் பேருரை!

சென்னை திருவல்லிக்கேணி சேப்பாக்கம் 73-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை நகர மேயர்—துணை மேயர் பாராட்டு விழா, 73-வது வட்ட நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் தி. துரைக்கண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்றது! அதுபோது, பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:



அன்புகெழுமிய அவைத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய தோழர்களே! நண்பர்களே! தாய்மார்களே! பாட்டாளிகளே! தொழிலாளர்களே!

இன்று இந்த வட்டத்து திராவிட முன்னேற்றக் கழகக்கிளைக் கழகம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்குத் தலைவராகவும், துணைத்தலைவராகவும் நமது அருமை நண்பர்களான திரு. எம். எஸ். அப்துல்காதர், திரு. தேவராசன் ஆகிய இருவரையும் பாராட்ட. இங்கு கூட்டப்பட்டிருக்கும் இந்த மாபெரும் கூட்டத்தில் எனக்குப் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்வதுடன், எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இன்று, நகர மன்றத்தில் நடைபெற்ற நகர மன்ற தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துவிட்டு இப்பொழுதுதான் நான் வருகிறேன்! மாநகராட்சி மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் அதில் கலந்துவிட்டு நகர மன்ற அலுவலாக நகர மன்ற கமிஷனருடனும், அதிகாரிகளுடனும் சென்றிருக்கிறார்கள்! அவர்கள் வருவதற்குச் சிறிது காலதாமதமாகும் என நினைக்கிறேன்! அதற்காக நீங்கள் அவர்களை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்! மன்னித்துப் பழக்கமுடைய நீங்கள் அவசியம் மன்னிப்பீர்களென்றும் எண்ணுகிறேன்! அவர்கள் விரைவில் வந்து விடுவார்கள்! நாம் அவர்களைப் பாராட்டும் நிலையிலிருக்கின்றபோது, நாம் செய்த பணிகள், நமது கொள்கைகள் இவற்றை நமது தோழர்கட்கு எடுத்துக் கூறப் போகிறோம்!

இந்த நகராட்சி மன்றத் தேர்தலில் பலத்த போட்டி இருந்தது!

இதில் தந்திரங்கள், சூழ்ச்சிகள், ஒருவரை ஒருவர் மோத வைத்தல், பிரித்து வைத்தல் அதிகாரம், ஆசை வார்த்தை முதலியவைகள் கையாளப்பட்டன!

அவைகளை எல்லாம் கடந்து நாம் ஒற்றுமையுடனும், அவர்கள் தந்திரங்களுக்கும், சூழ்ச்சிகளுக்கும், ஆசை வார்த்தைகளுக்கும் தோல்வி ஏற்படும்படி செய்து, இன்று பாராட்டும் நிலையிலிருக்கிறோம்! இதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த தலைவர் தேர்தலில் காங்கிரசார் ஏன் நின்றார்கள்? எதை நம்பி நின்றார்கள் என்பதைப் பற்றி சிறிது சிந்திக்க வேண்டும்! சென்ற தடவை தலைவர் தேர்தல் நடைபெற்றது! அப்பொழுது காங்கிரசார் அதிகார பூர்வமாக நிற்கவில்லை! அவர்கள் 37 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்! அவர்களோடு 13 சுயேச்சையினர் இருக்கிறார்கள். அவர்கள் சென்ற தடவை தாங்கள் தேர்தலுக்கு நிற்காது, சுயேச்சையாளர் ஒருவரைப் பிடித்து நிற்க வைத்து ஆழம் பார்த்தனர்! ஆனால் அப்போது தோற்றனர்! ஆனால் இந்தத் தேர்தலில் தாங்களே அதிகார பூர்வமாக நிற்கத் துணிந்தனர்! 6 மாதத்திற்குள் நாம் வீழ்ச்சியடைந்து விட்டதாகவும், தாங்கள் வளர்ச்சியடைந்து விட்டதாகவும் எண்ணிவிட்டனர்! சென்ற முறை நிற்க பயந்தவர்கள்—திராணியற்றவர்கள் இந்தமுறை காங்கிரஸ் பேரால் ஏன் நிற்க முயன்றனர்? நாம் மக்களிடத்தில் செல்வாக்கு இழந்துவிட்டோமென்று எண்ணியா, அல்லது நாம் மக்கள் மத்தியில் வீழ்ச்சியுற்று விட்டோம், அவர்கள் வளர்ந்துவிட்டார்கள் என்று எண்ணியா? இல்லை பின் ஏன் நின்றார்கள்! நாம் 45 பேர்கள் இருக்கிறோம்! நாம் ஆதரித்து நண்பர் சமத், சுயேட்சையின்ர் வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட்டு தோழர்களுடன் பெரும் பகுதியினராக இருக்கிறோம்! இருந்தும் எதை நம்பி காங்கிரஸ் என்ற அதிகார முத்திரையுடன் நின்றார்கள்! பணமிருக்கிறது, செல்வாக்கிருக்கிறது, அதிகாரமிருக்கிறது என்ற ஆணவத்துடன் நின்றார்கள்! சூழ்ச்சிகள் செய்து பார்த்தார்கள்—தந்திரங்கள் செய்து பார்த்தார்கள்—தோல்வியுற்றார்கள்!

முன்பெல்லாம் இந்த நகரம் பல மேயர்களைப் பார்த்திருக்கிறது! மக்களும் யார் மேயராக வருவார் என்று எண்ணுவதில்லை! காரணம் மேயர்களுக்கும் மக்களுக்கும் தொடர்பு இருக்காது! மேயர் தேர்தல் நடக்கும் இன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தி வந்ததும் தேர்ந்தெடுக்கப் பட்டவர் நேரே மோட்டாரில் அரண்மனைகளுக்குச் சென்று, உல்லாசமாக உபசரிப்புகளுக்கு ஆளாகி—செல்வந்தர்கள், சீமான்கள், முதலாளிகள் புகழுக்கும், பாராட்டுதலுக்கும் ஆளாகி வெற்றி உவகையில் இருப்பார்கள்! அப்படி அரண்மனைகளிலும், பங்களாக்களிலும், செல்வந்தர், சீமான்

(5-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரா கட்சியின் வளர்ச்சி காங்கிரசுக்குத் தான் வீழ்ச்சியே தவிர-நமக்கல்ல !

(நெடுஞ்செழியன் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடத்திலும் சிக்கியிருந்த மாநகராட்சி மன்றத் தலைவர்கள் இன்று ஆலமரத்தடிக்கும், சந்துகளுக்கும், பொந்துக்களுக்கும், ரோட்டோரங்களுக்கும் வந்து மக்கள் ம்த்தியில், பாட்டாளிகள் மத்தியில், ஏழைகள் மத்தியில் வந்து நிற்கும் நிலைக்கு வந்தது என்றால் அதற்கு என்ன காரணம்? அதற்கு நமது கழகம் செய்த பணிகளும், மக்கள் அதனிடத்தில் கொண்டுள்ள பற்றுதலும், நமது கொள்கை— நமது பணியை மக்கள் புரிந்து கொண்டதாலும், அதனால் நாமடைந்த வளர்சியுமே காரணமாகும்.

முன்பெல்லாம் நகர மன்ற தேர்தலுக்கு யார் நிற்கிறார்கள் என்றே தெரியாது. நிற்பவர்கள் மக்களிடத்தில் தொடர்பே வைக்கமாட்டார்கள். இன்னார் நிற்கிறார் என்று ஆள் மூலம் தெரிவித்து விட்டால், பணத்தால், செல்வாக்கால், அதிகாரத்தால் வெற்றி பெறுவார். நகரமன்ற உறுப்பினர் யாரென்றே மக்கள் அறிந்து கொள்ள முடியாது. அந்த நிலைமாறி இன்று 45 தி. மு. க. உறுப்பினர்களை எந்த சந்திலும் பார்க்கலாம், எந்த தெருவிலும் பார்க்கலாம். மக்களுடன் ஒன்றி, மக்களுடன் பழகி, மக்கள் குறைகளைப் போக்கப் பாடு படுகின்றனர். நமது கழகம் செய்து வரும் பணிகளையும், சட்ட மன்றத்திலும், மாநகராட்சி மன்றத்திலும் நாம் செய்த பணிகளை தினம் தினம் எடுத்துக் கூறிவருகிறோம். மக்கள் மன்றங்களில் நாம் அடிக்கடி தொடர்பு கொள்கிறோம். அவர்களைச் சந்திக்கிறோம். இன்று கூட நகரில் பல இடங்களில் நமது கூட்டங்கள் நடை பெறுகின்றன. நான் இங்கு பேசுகிறேன். அறிஞர் அண்ணா ஓரிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார், நண்பர்கள் கருணாநிதி, அன்பழகன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் பலரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், பல நண்பர்கள், நகர மன்றத்தில் என்ன செய்தோம்? ஒன்றும் செய்யவில்லை என்றும் குறை கூறுகிறார்கள். நாம் நகர மன்றத்தில், இடைக் காலத்தில் தான் பொறுப்பேற்றோம். அவர்கள் ஆட்சியிலிருந்து அவர்கள் போட்ட திட்டங்கள்— அவர்கள் செய்த காரியங்களைத் தொடர்ந்து இந்த ஆறுமாதத்தில் பணியாற்றினோம். நாமாக ஒன்றும் திட்டம் போடவில்லை. அவர்களே வரவு செலவு திட்டத்தைத் தயாரித்துவிட்டுச் சென்றார்கள். அதை வைத்துக் கொண்டு நம்மால் முடிந்ததை, நாம் விருப்பியதை — செய்ய முடிந்ததைச் செய்திருக்கிறோம். குடி தண்ணீர், சாலைகளைச் செப்பனிடுதல், சுகாதாரம் முதலியவைகளை காங்கிரசார் காலத்தில் சாதிக்காததை குறுகிய காலத்தில் நம் தோழர்கள் செய்திருக்கிறார்கள். பெரும்பாலும் மாநில அரசினர் தயவு இருந்தால் இவர்கள் காரியங்களை நிறைவேற்றலாம். அவர்கள் மனம் வைக்காவிட்டால் இவர்கள் காரியங்கள் செய்ய முடியாது. அப்படி இருந்தும் முடிந்தளவு மக்கட்கு பல நன்மைகள் புரிந்துள்ளனர்.

நமது தோழர்களையும் நமது கழகத்தையும், நம்மையும் ஆணவத்தோடும் அகந்தையோடும், அதிகார மமதையோடும் தூற்றுகிறார்கள். இவர்களால் என்ன செய்ய முடியும் என்று கேட்டு ஏசுகிறார்கள். அப்படி தூற்றி அவர்கள் மகிழ்வதாக இருந்தால் மகிழட்டும். அதனால், அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிற தென்றால், அந்த மகிழ்ச்சியை அடைந்து நீடூழி காலம் வாழட்டும். அவர்கள் தூற்றுவதால், ஏசுவதால் பழிப்பதால் நாம் அழியமாட்டோம், மறையமாட்டோம், வீழமாட்டோம். அதற்கு மாறாக— வளர்வோம் வலிவும் பொலிவும் நிறைந்து மிளிர்கிறோம்! நம்மை யாராலும் வீழ்த்த முடியாது. அழிக்க முடியாது. தூற்றலாலும், ஏசலாலும், பழித்தலாலும் வளர்ந்தவர்கள். ஏசியவர்கள், பழித்தவர்கள், தூற்றியவர்கன், மறைந்துவிட்டனர், நாம் வளர்ந்திருக்கிறோம். அவர்கள் நினைப்பது போன்று நாம சாமான்யர்கள் தான்-ஏழைகள் தான் ஆனால் ஆற்றலும், நெஞ்சுறுதியும், அன்புள்ளமும், வலிவும், திறமையும் மிக்கவர்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அகந்தை, ஆணவம், மமதை, என்றும் நிலைக்காது நீதி, உண்மை, நேர்மை, பண்பு, பொறுமை என்றுமே நிலைத்து நிற்கும். நீதி அழியாது, மறையாது.

இரண்டு ஆண்டுகட்கு முன்பு நம்மை பழித்தவர்கள் தூற்றியவர்கள், அழிக்க எண்ணியவர்கள், நம்மை ஒழிக்க நினைத்தவர்கள் இன்று நம்மை வாழ்த்துகின்றனர், புகழ்கின்றனர், பாராட்டுகின்றனர்.

நம்மை நாசக்காரர்கள், பிரிவினைக்காரர்கள், பிற்போக்கானவர்கள் என்று தூற்றியவர்கள்! இன்று நம்மோடு சேர்ந்து வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்! எப்போதும் ஆபாசத்தை ஒதுக்கக் கூடாது. ஆபாசமும், குப்பைகளும் நமக்குத் தேவைப் படுகிறது! ஆபாசமான பொருளும் பயிர்களுக்கு எருவாக உபயோகப்படுகிறது! பயிர் வளர எப்படி ஆபாசப் பொருள்கள் உபயோகப்படுகிறதோ, அதே போன்று நாம் வளர்வதற்கு ஆபாசப் பேச்சுகளும் தேவைப் படுகிறது. ஆபாசப் பேச்சுக்களாலும், தூற்றலாலும் எந்த இயக்கமும் வீழ்ச்சியுறவில்லை. மாறாக வலிவு பெற்று வளர்ந்திருக்கிறது! இன்று நம்மை சாதாரண காங்கிரஸ் தொண்டர்களிலிருந்து அமைச்சர்கள்வரை ஆபாசமாகத் தூற்றித்தான் வருகிறார்கள்! ஏசுபவர்கள் ஏசட்டும், தூற்றுபவர்கள் தூற்றட்டும், வாழ்வோம், வாழ்வோம், அவர்கள் வீழ்வார்கள்!

நம் கழகம் துவங்கியபோது நம்மைத் தூற்றுதவர்கள் இல்லை! இன்று நாம் எப்படி இருக்கிறோம். பல கிளைக் கழகங்களுடனும், சிற்றூர் பேரூர்களில் நமது கொடிகள் பறக்கவிட்டுக் கொண்டும், பட்டி தொட்டிகளில் நமது கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது. 50-ம் ஆண்டில் நாம் இருந்த நிலை, 52-ல் நாம் இருந்த வலிவு, 57-ல் நமக்கிருந்த செல்வாக்கு, 59-ல் நாமடைந்துள்ள பொலிவு — நாமடைந்துள்ள உச்சநிலை! இது எதனால்? ஏன், உண்டாயிற்று இதை எண்ணிப் பாருங்கள்!

52-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாம் கலந்து கொள்ள முடியவில்லை! ஆளை நிறுத்தி வைக்க நமக்கு தைரியமில்லை. உறுதியில்லை! நமது ஆதரவோடு சிலர் நின்றார்கள். 57-ம் ஆண்டு தேர்தலில் 152 இடங்களில் போட்டியிட்டோம். 15 இடங்களைப் பெற்றோம். 75 ஓட்டுகள், 100 ஓட்டுகள், 500 ஓட்டுகள் கிடைக்காமல். நாம் பல பேர் தோற்றிருக்கிறோம்! இந்த வட்டத்தில் நின்ற திரு. அப்பாதுரை அவர்கள்குறைவான ஓட்டுகளில் வெற்றிபெறும் வாய்ப்பை இழந்திருக்கிறார்! இன்னும் பலர் வெற்றிபெறும் வாய்ப்பிருந்தும், வசதியற்ற நிலையில் தோல்வி கண்டிருக்கின்றனர்! நம்மையும், நம்மோடு எதிர்த்தவர்களையும் சிந்தியுங்கள். நம் நிலை என்ன? அவர்கள் நிலையென்ன-அவர்கள் வசதி, வாய்ப்பு யாது, நமது வசதி—வாய்ப்பு யாது? நம்முடைய நிலையும், நம்மை எதிர்த்தவர்கள் நிலையையும் சற்று சிந்தியுங்கள்!

நம்மை எதிர்த்தவர்கள் ஆலை முதலாளிகள், அதிகாரம் படைத்தவர்கள் மிட்டாதார்கள், மிராசுதார்கள்.

நாமோ பண மற்றவர்கள்— அதிகாரமற்றவர்கள், பிரச்சார பலமற்றவர்கள், பத்திரிகை பலமற்றவர்கள். நம்மைப் பார்த்து பெரியார்கூட அன்னக்காவடிகள் என்று தூற்றினார். அப்படிப்பட்ட அன்னக்காவடிகள்தான். நம்மை அன்னக்காவடிகள் என்று ஏசிய பெரியார் சொர்ணக்காவடிபிடித்து நம்மை எதிர்த்து வந்தார்.

நீங்கள் தரும் உண்டியலையும், கூட்டம் கூட்டி அதில் வரும் கட்டணத்தையும் நம்பி இருந்தவர்கள். அப்படி இருந்தும் நாம் பெற்ற வாக்குகள் என்ன? இன்று சட்ட சபையில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 15 தோழர்கள் எதிர் வரிசையில் சர்க்கார் செய்யும் குறைகளை வாதிக்கும் நிலையைப் பெற்றிருக்கிறோம்!

அதேபோன்றுதான் நகராண்மைக் கழகத்திலும் நாம் நகராண்மைக் கழகத்தில் 57-ம் ஆண்டு நம் கழகத்தின் சார்பில் நிற்க முடியாத நிலையிலிருந்தோம். அப்பொழுது நமது நண்பர்கள் முனுசாமியும், அரசுவும் தனிப்பட்ட முறையில் நின்று வெற்றி பெற்றார்கள். நமது கழக உறுப்பினர்களாக இருந்தும், நமது முத்திரையோடு நிற்கின்ற வாய்ப்பு அப்போது இல்லை. ஆனால், 59-ல், 90 இடங்களில் நாம் நமது தோழர்களை நிறுத்தினோம்! 45 இடங்களைப் பெற்

(8-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாகிறது!

கட்சிகளைப் பற்றி காமராஜ் பேசிய பேச்சுகளின் தொகுப்பு நூல்

சுதந்திரமும் முன்னேற்றமும்!

கிளேஸ் பதிப்பு விலை 1-50

கிடைக்குமிடம்:—

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

அத்தியாயம் 27

இராணுவ தளபதி கர்னல் தாமஸ் தனியறை யொன்றில் உட்கார்ந்துகொண்டு எதையோ பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்! அவருடைய முகத்திலே களிப்பு ரேகைப் படர்ந்து அது மகிழ்ச்சியாக இழையோடியிருந்தது! உள்ளமோ பெருமிதத்தால் விம்மி, இன்ப நாதத்தை இசைத்துக் கொண்டிருந்தது! "என்னுடைய ஆசை பூர்த்தியாக இன்னும் இருபத்தி நான்கு மணி நேரம்தான் இருக்கிறது!" அதற்குப் பிறகு நான்தான் இந்த நாட்டின் அதிபதி!" என்று தனக்குத்தானே, வார்த்தைகளை ஓசைபடாமல் உச்சரித்துக் கொண்டிருந்தார்!

"இந்த உன்னதமான நிலையை நான் சாதாரணமாகப் பெற்றுவிட்டேனா? ஒரு நாளும் இல்லை! காடுகளைக் கடந்திருக்கிறேன், மேடுகளைத் தாண்டி இருக்கிறேன்! சில பல நேரங்களில் என் உயிரையே தத்தம் செய்தும் கொடுத்திருக்கிறேன்! உழைப்புக்கு என்றுமே பலன் உண்டு என்பதை என் வாழ்க்கை யொன்றே போதுமானதாகும்! காடுகளிலே திரிந்தேன்! இன்று நாடாளவும் வந்து விட்டேன்!" என்று பூரிப்போடு கொஞ்சம் வாய் விட்டே பேசிக் கொண்டிருந்தார்!

"இந்த நல்ல செய்தியை என் கண்ணாட்டிக் கேட்டால், கட்டி வெல்லம்போல் தின்று என் கன்னத்தை ருசி பார்ப்பாளே! அவளிடம் இனியும் மறைத்துப் பேசக்கூடாது! நான் யார் என்பதை வெளிப்படையாகச் சொல்லி அவளை மகிழ்விக்க வேண்டும்! நான்தான் இந்த நாட்டுக்கு ராஜா, நீ தான் இந்த நாட்டுக்கு ராணி" என்று சொன்னால் அவளுடைய உள்ளம் எப்படி மகிழும் தெரியுமா என்றெல்லாம் தளபதி கர்னல் தாமஸ் கனவுலகில் யாத்திரை செய்து கொண்டிருந்தார்!

தன் அன்புக் காதலியிடம் இந்த நல்ல செய்தியை தெரிவித்து அவள் அளிக்கும் பரிசைப் பெற்றுக்கொண்ட பின்பே தன் அதிகாரிகளிடமும், தான் சிப்பாய்களிடமும் சொல்ல வேண்டும் என்று எண்ணினான்! தன் உடைகளை மாற்றிக்கொண்டான்! உடனே புறப்படவும், செய்தான்!

அத்தியாயம் 28

இந்த ஆட்சி பல கோடி மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது! சுயநலம் ஒன்றையே கருதி நாடாளுவது பெருத்த அவமானமாகும்! ஆட்சிபீடம் ஏறுகின்ற நேரத்தில் எதைச் சொல்லி ஆட்சியில் அமர்ந்தார்கள் என்பதை கொஞ்சமாவது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்! தேர்தல் காலத்தில் சொல்லுவதெல்லாம் வெறும் கற்பனை என்பதை இந்த ஆட்சியாளர் செய்கையால் விளக்கி வருவது குறித்து பெருத்த மனவேதனை யடைகிறோம்!

சர்க்கார் கட்சித் தலைவர்: கனம் எதிர்க்கட்சித் தலைவர் சாட்டும் குற்றச்சாட்டுக்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

எதிர்க்கட்சித் தலைவர்: ஒன்றல்ல. இரண்டல்ல எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன!

சர்க்கார் கட்சித் தலைவர்: கற்பனை ஆதாரங்களா?

எதிர்க்கட்சித் தலைவர்: கற்பனை என்பது இல்லாத விஷயங்களை சொல்லுவது மட்டுமல்ல— மனிதனுக்குத்தேவையான விஷயங்களை உருவகப்படுத்திக் காட்டுவதுமாகும்!

சர்க்கார் கட்சித் தலைவர்: கனம் எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை! பல பெரியவர்கள், கற்றுணர்ந்த மேதைகள் அனைவரும் கற்பனை என்னும் சொல்லுக்கு "பூஜ்யம்" என்றுதான் பொருள் கூறி இருக்கிறார்கள்! உதாரணமாக தமிழ் நாட்டு முதலமைச்சர், கற்பனை என்னும் சொல்லுக்கு—"இல்லாததை உண்டு என்று சொல்லுவது, இட்டுக் கூறுவது" என்றுதான் கூறி இருக்கிறார்!

எதிர்க்கட்சித் தலைவர்: அது அவர்கள் நாட்டிற்குச் சரியாக இருக்கலாம்! நாம் கற்பனைவாதிகள் என்பதை மறந்து விடக் கூடாது! வருங்காலத்தைப் பற்றி கற்பனை செய்யாதவன் அசடனாவான்! (சபைத் தலைவர் குறுக்கிட்டு) ஆர்டர், ஆர்டர்! இந்த சபையில் எவரையுமே கண்ணியக் குறைவாகப் பேசக்கூடாது!

எதிர்ச்கட்சித்தலைவர்: நான் பேசியது கண்ணியக் குறைவென்றால் அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்!

சபைத் தலைவர்: கனம் எதிர்க் கட்சித் தலைவருச்கு இன்னும் பத்து நிமிடங்கள் தான் இருக்கின்றன! அதற்குள் சொல்ல வேண்டியதை சுருக்கமாகச் சொல்லிவிட வேண்டும்!

எதிர்க்கட்சி: சபைத் தலைவர் அவர்களே! ஆரம்பத்தில் இந்த சர்க்காரை துரோக சர்க்கார் என்று குற்றம் சாட்டினேன்! சுயநல சர்க்கார் என்று கூறினேன்! அதற்கு, "ஆதாரம் வேண்டுமென்று" சர்க்கார் கட்சித் தலைவர் கூறினார்! நாம் இந்த சர்க்காரைத் துவக்கிய நோக்கமென்ன என்பதை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் சொல்லி வந்திருக்கிறோம்! உண்ண உணவில்லை என்ற நிலை மாறிற்று! உடுக்க கந்தை இல்லை என்ற கவலை ஒழிந்தது! இருக்க இடம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது! ஆனால் எத்தனை பேருக்கு கிடைத்திருக்கிறது? இந்தப் போட்டி சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு ஆயிரம் பேர்களின் வாழ்வு உயர்ந்தால் போதுமா? நம்முடைய சகோதரர்கள் கோடிக் கணக்கிலே வறுமையில் உழன்று வாழுவதையும் நாம் கவனிக்க வேண்டாமா? சொந்த மக்களுக்கு மட்டும் சோறு போடுவது, மற்றவர்களை வறுமையால் சாகடிப்பது என்பது சுயநலமல்லவா?

சர்க்கார் கட்சித் தலைவர்: சுயநலம் என்ற வார்த்தை இதற்கு பொருந்தாது!

எதிர்க்கட்சித் தலைவர்: சுயநலம் என்றால் தனிப்பட்டவர் அடையும் நலனுக்கு மட்டும் கூறுவது அல்ல என்பதை கனம் அமைச்சர் உணர வேண்டும்!

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நாம் எந்த இலட்சியத்திற்காக இந்த சர்க்காரை தோற்றுவித்தோமோ அந்த

லட்சியம் நிறைவேறிட என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது! சோற்றுக்காகவும், துணிக்காகவும் இந்த லட்சியத்தை மேற்கொள்ளவில்லை! ஒரு ஆயிரம்பேர் சொகுசு வாழ்க்கையை பெற மட்டுமல்ல இந்த லட்சியத்தை மேற்கொண்டது! இராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்ய வேண்டும் எல்லோரும் இராணுவ வீரர்களாக மாற வேண்டும்! முடியுமானால், கனம் அமைச்சர் விரும்பினால் நானே தளபதியாக பணிபுரியவும், தாயகத்தை மீட்கும் பணியில் இறங்கவும் தயாராக இருக்கிறேன்! அத்தோடு ஒரு தீர்மானத்தையும் இந்த சபையின் முன்பு வைக்க விரும்புகிறேன்!

தீர்மானம்

"வருகிற ஜனவரி மாதம் 15ந் தேதி முதல் நம் தாயகத்தை விடுதலை பெற்ற நாடு என பிரகடனப் படுத்த வேண்டும்! அதற்கான முயற்சிகளை உடனடியாக இந்த சபை எடுக்க வேண்டும்!

எதிர்க் கட்சித் தலைவர் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, சர்க்கார் கட்சித்தலைவரும், கனம் போலீஸ் அமைச்சருமான திரு. பாண்டியன் பேசியதாவது: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே! கனம் உறுப்பினர்களே! எதிர்க்கட்சித் தலைவரின் கடுமையான தாக்குதில்களால் என் உள்ளம் உள்ளபடியே புண்ணடைந்து போயிருக்கிறது! இந்தச் சர்க்காரை அவர் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்! சுயநல சர்க்கார் என்றார்! துரோக சர்க்கார் என்றார்! உள்ளபடியே இதற்கு நான் வருந்தாமல் இருக்க முடியவில்லை!

நாம் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லாதவர்கள்! ரத்த புரட்சியை விரும்பாதவர்கள்! பிணங்களை அடுக்கி அதன் மேல் விடுதலைக் கொடியை நாட்டி களிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கு எப்போதுமே இருந்ததில்லை! மக்களைத் திருத்த வேண்டும், மக்கள் மனதைப் பக்குவப் படுத்த வேண்டும்! அதற்காக அமைக்கப்பட்ட சர்க்கார்தான் இது! கனம் எதிர்க்கட்சித் தலைவர் இதை போட்டி சர்க்கார் என்று கூறினார்! உள்ளபடியே இது யாருக்கும் போட்டியாக இயங்கிவரும் சர்க்கார் அல்ல! இது ஒரு மாடல் சர்க்கார்! நாம் எதைச் செய்வோம் என்பதை எடுத்து விளக்குவதற்காகவே இந்த சர்க்காரைத் துவக்கினோம்! இதைப் போட்டி சர்க்கார் என்று சொல்லுவதை விட, நம் பிரச்சார சபை என்று சொல்லுவதே பொருத்தமாகும்!

கனம் எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றுவோமானால் நாட்டிலே பல பயங்கரமான விளைவுகள் ஏற்படக்கூடும்! எனவே மக்களைப் பக்குவப் படுத்தி நாட்டை சமாதான முறையில் மீட்பதே சாலச் சிறந்ததாகும்! இந்த சபை, இந்த விளக்கத்திற்குப் பின்பாவது நல்ல முடிவுக்கு வரும் என்றும் நம்புகிறேன!

சர்க்கார் கட்சித் தலைவர் பேச்சுக்குப் பின்பு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது! தீர்மானத்தை ஆதரித்து 20 பேர்களும் எதிர்த்து 10 பேர்களும் வாக்கு அளித்தனர்! எதிர்க் கட்சித் தலைவர் கொண்டுவந்தத் தீர்மானம் உறுப்பினர்களின் பலத்த கைதட்டலுக்கிடையே நிறைவேற்றிற்று. தீர்மானம் நிறைவேறிய பின்பு சர்க்கார் கட்சித் தலைவர் எழுந்து பேச ஆரம்பித்தார்!

தலைவர் அவர்களே! நான் நீண்டதொரு விளக்கம் தந்த பிறகும் இந்த சபை இப்படி தவறான நிலைக்கு வந்தது குறித்து உண்மையிலே வருந்துகிறேன்!

சபைத் தலைவர்: ஆர்டர்' ஆர்டர்! கனம் சர்க்கார் கட்சித் தலைவர் சபையின் நடவடிக்கைக்கு மாசு கற்பிக்கக்கூடாது! சர்க்கார் கட்சித் தலைவர், மன்னிக்கவும்! இந்தச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தை நிறைவேற்றி வருகிற ஜனவரி மாதம் 15ம் தேதி முதல் தாயகத்தின் மீது விடுதலைக்கொடியை பறக்க விடுவேன் என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்!

(சபை கலைகிறது)

(தொடரும்)

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும்
ஒப்பற்ற கலை ஏடு

கலைவாணன்

மாதமிருமுறை
ஆசிரியர் :—கே. ஆர். சந்திரன்
மூவண்ண முகப்பு—விலை 50 காசுகள்
—விபரங்களுக்கு—
நிர்வாகி, 'கலைவாணன்' 59/1, வாலாஜாரோடு, சென்னை 2.

(அண்ணா பேச்சு)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் இப்படித் திட்டலாமா அண்ணாத்துரையை திட்டியிருக்கக் கூடாதா என்றும் கருதுகிறார்.

தந்திரமாக பெரியாரை விட்டு என்னை திட்டச் சொன்னார். பெரியாரும் தி.மு.க.வும் ஒன்றுக் கொன்று மோதிக் கொண்டால், கம்யூனிஸ்டும் கழகமும் மோதிக் கொண்டால்—அலுத்துப் போய் வருகிற நேரத்தில் அடித்து விடலாம் என்று நினைக்கும் குத்துச் சண்டை பயில்வானைப் போல் காமராசர் நினைத்தார்!

குத்துச் சண்டை பார்த்தவர்களுக்குத் தெரியும், சிறிய ஜதைக்குப் பிறகு தான் பெரிய ஜதை நடைபெறும் சிறிய ஜதை சண்டை போட்டு முடிந்துவிட்ட பிறகு தான் முருகேசன்—டெர்ரி ஜதை நடைபெறும். அதைப் போல் கட்சிகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்ட பிறகு மாப்பிள்ளை போல் வந்து 'என்ன கட்சி, அது ஒரு கட்சியா' என்று திட்டி விடலாமென்று நினைக்கிறார்.

திராவிட கழகத்துக்காரர்கள் என்னை திட்டியதை விட உலகத்தில் எவனாவது திட்டியிருப்பானா? தாக்கிப் பேசியவர்கள் எத்தனைபேர்? திருப்பித்தாக்கவில்லை ஏன்? இட்டத் தெரியாது என்ற காரணத்தினால் அல்ல!

முள் மீது இலை பட்டாலும், இலைக்குத் தான் நஷ்டம்! இலை மீது முள் பட்டாலும் இலைக்குத் தான் நஷ்டம்!

ஊரார் பிள்ளையை விட்டு ஆழம்பார்ப்பது போல் திராவிட முன்னேற்றக் கழகத்தை சுதந்திராக் கட்சியோடு மோதவிட்டு வேடிக்கைப் பார்க்க வேண்டுமென்று அமைச்சர்கள் விரும்புகிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் 'ஸ்கௌட் மூவ்மெண்ட்' என்று சொல்வதுண்டு! ஆறுந் தேதி அறுபத்திமூவர் அங்கே போ! எட்டாந் தேதி மாரியம்மன் திருவிழா அங்கே போ என்று கூறுவார்கள்! அதுபோல் திராவிட முன்னேற்றக் கழகம் மாறிவிடும் என்று நினைக்கிறார்கள். அரசியலில் எந்த வலையிலும் விழ மாட்டோம், அப்படி விழுந்தால் அந்த வலை நிலைக்காது.

வேடன் விரித்த வலையில் மான் விழுந்தால் தப்பாது. அதே வலையில் காளை விழுந்தால், வலை அறுபடும். நிலைக்காது! அது போல் என்னை வலையில் வீழ்த்தி விடலாமென்று நினைக்கிறார்கள். பெரியாரின் அன்பு வலையிலேயே விழவில்லை யென்றால் இந்த ராஜ தந்திர வலை என்னை ஒன்றும் செய்ய முடியாது!

பத்து பதினைந்து நாட்களுக்கு முன்பு ஆந்திர சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்கள். குறிப்பிட்ட சில அதிகாரங்களைமட்டும் மத்திய சர்க்கார் வைத்துக்கொண்டு மற்ற அதிகாரங்களை மாநில சர்க்காருக்கு கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானம்.

நம்முடைய அடிப்படை எண்ணம் அவர்களுக்கும் ஏற்பட்டு இன்று தீவிரமாக பயன்படுத்த தொடங்கியிருக்கிறார்கள்.

நாம் துவக்கியிருக்கும் இயக்கம், எங்கும் நிறைநாதமாய் விளங்குகிறது! நாம் எதிர்பார்க்கும் வளர்ச்சிக்கு மேலாக உறுதியோடு நாளுக்கு நாள் வளர்கிறது! மேலும் மேலும் நம் வளர்ச்சி வளர வேண்டுமென்ற நம்பிக்கை உங்கள் உள்ளத்தில் எழ வேண்டும், அதற்கான பணியில் நீங்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்!

மாதுங்கா
தி.மு.க. 6-வது ஆண்டு விழா

இடம் : நப்பூ கார்டன் (மாதுங்கா C.R.)
நாள் : 1—1—60 வெள்ளி மாலை 6 மணி

தலைவர் :
ஜே. ஜோதிநாயகம்

வரவேற்பாளர் :
தொ. து. அன்புச்செழியன்

சொற்பொழிவாளர்கள் :
பேராசிரியர் க. அன்பழகன் M.A., M.L.A.
தோழியர். வெற்றிச் செல்வி அன்பழகன்
வழக்கறிஞர் சு. இரத்தினவேல் பாண்டியன் B,A.,B.L.
வழக்கறிஞர் அழகியநம்பி B.A., B,L.
பத்தமடை ந. பரமசிவம்
பிராஞ்சேரி ஊராட்சி மன்றத் தலைவர் : இராமையா

அனைவரும் வருக!

அதிகாரத்தைக் காட்டி ஓட்டு வாங்குவது தான் ஆட்சியாளரின் ஜனநாயக தத்துவமா ?

(நெடுஞ்செழியன் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றோம்! நம்முடைய ஆதரவாளர் ஒருவரைப் பெற்றோம்! நம்மில் தோற்றவர்கள் பலர் மிக மிகக் குறைந்த வாக்குகளைப் பெற முடியாத நிலையில் தோற்றார்கள். எப்படி இந்த நிலையை அடைந்தோம். பழிக்கப்பட்டோம், தூற்றப்பட்டோம், இன்னல்களுக்காளானோம். அப்படி இருந்தும் வளர்கிறோம், வளர்ந்து கொண்டிருக்கிறோம்! தூற்றியவர்கள் வீழ்ந்தார்கள்; வீழ்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் நாம் நினைத்துக்கூட பார்க்க முடியாத நகர மன்றங்களில் நாம் நுழைந்திருக்கிறோம். 100க்கு 100 பேர்கள் அவர்கள் அன்றிருந்த பஞ்சாயத்துக்கள்! நாம் காலடி வைக்கவே முடியாத நிலையிலிருந்த நகர மன்றங்களில் நமது தோழர்கள் வீற்றிருக்கிறார்கள், பல ஆண்டுகளாகவே அவர்கள் கையிலிருந்த கோவை நகர மன்றத்தில் நாம் 11 பேர்களை உறுப்பினர்களைக் கொண்டும். அங்கு நமது தோழர் உதவித் தலைவராகவும் அமைத்திருக்கிறோம். எண்ணிக்கூட பார்க்க முடியாத ஆம்பூரில் 5 நகரமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறோம். 4 உறுப்பினர்களை பெற்றிருந்த தூத்துக்குடியில் 10 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறோம். அதே போன்று ஆம்பூர், தஞ்சை, சேலம் போன்ற நகரமன்றங்களில் முன்பு நாம் இல்லை. இப்பொழுது நாம் அங்கம் பெற்றிருக்கிறோம். வீழ்ந்துவிட்டார்கள். அழிந்துவிட்டார்கள். பார், பார் என்று எக்காளமிட்டவர்கள் எங்கே?

நாம் அழிந்துவிடமாட்டோமா? என்று ஆர்பரித்தவர்கள் — அகமகிழ்ந்தவர்கள் அழிந்து வருகிறார்கள், வீழ்ந்து வருகிறார்கள். நாம் வளர்ந்து வலிவு பெற்று வருகிறோம்; ஏன் சிந்தியுங்கள்?

சமீபத்தில் பாண்டிச்சேரியில் நடந்த சட்ட மன்றத் தேர்தலில் நாம் தோற்றோம். அதை வைத்துக் கொண்டு, நாம் செத்தோம்; அழிந்தோம்; குழி தோண்டப்பட்டோம்; கருமாதி செய்யப்பட்டோம் என்று ஏசி, பார் பார் பாண்டிச்சேரியை என்று பரவசமடைந்து ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்ந்தார்கள்! அது மட்டுமா, பாண்டிச்சேரியில் தோற்றதை வைத்து தி. மு. க. என்று பிணம் போட்டு, நம் தோழர்கள் பாடையைத் தூக்குவது போன்றும், நமது அண்ணா கொள்ளிச் சட்டி எடுப்பது போன்றும், நான் சங்கு ஊதுவது போன்றும். நண்பர் கருணாநிதி சேகண்டி அடிப்பது போன்றும் படங்கள் போட்டு, சுவரொட்டிகள் தயாரித்து, சென்னையிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் ஒட்டச்செய்து, அதுவும் பூந்தமல்லியில் நமது மாநாடு நடைபெறுகின்ற சமயத்தில், அங்குதான் கருமாதி நடக்கிறது என்று அங்கும் சுவர்களில் ஒட்டச்செய்தார்கள். அதுவும் இந்த நற்பணியில் மிகவும் தீவிரமாகவும், அக்கரையோடும். ஆர்வத்தோடும் பணியாற்றியவர் இப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நண்பர் ஓ. வி. அளகேசனாவார்கள். அப்படியாவது அவர்கள் அகமகிழ்ந்து கொள்ளட்டும். அவர்களுடைய பண்பை மக்களறியட்டும், சத்தியம், காந்தியம், அஹிம்சை, ராமராஜ்யம், ஜனநாயகம் முதலியவைகளைப் போதித்தவர்களின் நேர்மையை, நெறியை மக்கள் அறிந்துகொள்ளட்டும். அவர்கள் நம்மைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு வருகிறார்கள். நம்மை அழித்துவிட்டதாகவும், நாம் இருந்த இடத்தில் புல முளைத்து விட்டதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எண்ணம் வாழட்டும், அவர்களும் நீடுழி வாழட்டும்!

பார், பார் பாண்டியை என்று ஆர்ப்பரிப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், பாண்டியில் நாங்கள் எதைப் பெற்றிருந்தோம், அதை இப்போது இழந்து விட்டோம். நெடுங்காலமாக பாண்டியில் எங்களிடமே இருந்ததை இப்போது இழந்திருக்கிறோம், பெற முயற்சித்தோம், தோல்வியுற்றோம்! பாண்டியில் ஏதோ 5 இடங்கள் இருந்தது போலவும், இப்போது ஒன்றுமில்லாமல் இழந்து விட்டது போலவும் கூறுவது அறவுடைமையாகாது, பாண்டித் தேர்தலில் 27 இடங்களில் நின்றோம், தோற்றோம், லாபமுமில்லை, நஷ்டமுமில்லை. தேர்தல் களத்தில் புகவே முடியாத நிலையிலிருந்த நாங்கள், துணிவும், தைரியமுமற்றிருந்த நாங்கள் துணிந்து தேர்தல் களத்தில் இறங்கினோம்! அதில் தோற்றோம்! ஆனால், நானும் அறிஞர் அண்ணா அவர்களும் பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய இந்த இரண்டு இடங்களில்தான் போய் பேசினோம். மற்ற இடங்களுக்குப் போக முடியவில்லை. காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சி மட்டும்தான் தேர்தல்களில் போட்டியிடும் நிலையிலிருந்தது. அவர்கள் இருவருமே தேர்தல் களத்தில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்! மற்றவர்களுக்கு அங்கு தேர்தல் களத்தில் இறங்குவதற்கான வலிவோ, துணிவோ, திராணியோ இல்லாதிருந்தார்கள். நாம் துணிந்து நின்றோம், தோற்றோம் ஆனால் பாண்டி, காரைக்காலில் மட்டும் நுழைந்த நாம் இப்பொழுது பட்டி தொட்டிகளில் புகுந்தோம்! நம் கொள்கைகள் புகுந்தது! பல இடங்களில் கொடிகள் பறக்கின்றன! இப்போது நம்மைப் பற்றி எங்கும் தெரிந்து கொண்டார்கள், புரிந்து கொண்டார்கள். பல கிளைகள் ஏற்பட்டிருக்கின்றன! உதயசூரியன் சின்னத்தைப்பற்றி தெரியாதிருந்தவர்கள் இப்போது தெரிந்து கொண்டார்கள். இது நமது வளர்ச்சியைக் காட்டவில்லையா—இது நமக்கு லாபமில்லையா?

பாண்டிச்சேரியைப்பார், பார் என்றால் எதைப் பார்ப்பது நீ தோல்வி அடையாது எங்கும் வெற்றியைத் தான் கண்டு வந்திருக்கிறாயா? தோல்வி - வெற்றியைக் கொண்டு ஒரு கட்சி மறைந்து விடுமா? இது தெரியாது பார்-பார் என்றால் தேர்தலுக்குப் பின் நாங்கள் வளர்ந்திருப்பதை பாரேன் பாண்டிச்சேரி தேர்தலுக்குப் பின் பாண்டிச்சேரி பகுதிகளில் நாங்கள் வளர்ந்திருப்பதையும் எங்கள் தோழர்கள் சம்பத், அன்பழகன், சிற்றரசு, கருணாநிதி முதலியவர்கள் சிற்றூர், பேரூர்களில் பேசி வருவதையும் புக முடியாத—போக முடியாத இடங்களில் போய் வருவதையும் அந்தப் பகுதிகளில் நாங்கள் வளர்ந்திருப்பதையும் பாரேன். அதை விட்டு தோல்வியை மட்டும் பார் பார் என்றால் அதனால் என்ன பயன்? உங்களுக்கும் அவர்களுக்கும் ஒரு உதாரணம் கூறி விளக்குகிறேன்.

ஒரு மைதானம் இருக்கிறது. அங்கு பலர் வீடுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அங்கு உள்ளே புகுவதற்கே முடியாத நிலையிலும். வாய்ப்புக் கிட்டாத வகையிலிருக்கிறோம்.

உள்ளே புகவாய்ப்புகிடைத்துவிட்டது அங்கு வீடுகட்ட அடிப்படைக் கல்லும் நாட்டப்பட்டது, 15 ஆயிரம் செங்கல்லும் கொண்டுவந்து அடுக்கப்பட்டது. இனி அடுத்து என் உயரம் சுவர் வைப்போம்—பின் குடிசைப் போடுவோம். அதற்குள் உள்ளே புகுந்தவர்கள் வீடு கட்ட முடியவில்லை என்றால் இதில் என்ன அறிவு இருக்கிறது. பாண்டிச்சேரி தேர்தலால் எங்கட்கு லாபமே ஒழிய நஷ்டமில்லை, கிங்காங் — தாராசிங் என்ற பயில்வான்களே குத்துச் சண்டை களத்தில் தோன்றிக் கொண்டிருப்பது போன்று பாண்டி தேர்தல் களத்தில் காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் என்ற பயில்வான்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள், காமராசர்—கருப்பையா என்பவர்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். இப்போது 27 சிறிய பயில்வான்கள் தோன்றி 15 ஆயிரம் குத்துக்களையும் வாங்கிக் கொண்டார்கள். கிங்காங் — தாராசிங்கை எதிர்க்கப் பலர் முன்வந்தது போன்று காங்கிரஸ்— கம்யூனிஸ்ட்டுகளே எதிர்த்துக் கொண்டிருந்த களத்தில் இடையில் நாம் புகுந்திருக்கிறோம். அதனால் நமக்கு நஷ்டமில்லை. லாபமேதான். மற்றும் தேர்தலில் இவர்கள் என்ன பேசினார்கள். முதலமைச்சர் காமராசர் தேர்தல் கூட்டத்தில் பேசும்போது' நாங்கள் வந்தால் கள்ளுக்கடை, சாராயக்கடை ஒழியுமென்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. இங்கு இருக்கும். கள்ளுக்கடைகளை ஒழிக்க மாட்டோம். நீங்கள் எங்கள் கட்சிக்கு ஓட்டளித்தால் பார்த்துக்கொள்வோம்' என்று பேசினார். இப்படிப் பேசுவதுதான் காந்தியத்தைப் பாதுகாப்பதோ?—அவரது கொள்கையை—அவர் கொண்டிருந்த எண்ணத்தை வளர்ப்பதோ. அவைகளை ஆழக் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். காந்தியார் எந்த மதுவிலக்கைப் பற்றி பிரச்சாரம் செய்து வந்தாரோ, அதைக் கேவலம் ஓட்டுக்காக பாண்டிச்சேரியில் துரத்தி, அடித்து விரட்டி விட்டார்கள். ஆகவே பாண்டிச்சேரியைக் காட்டிப் பழிப்பதாலோ, தூற்றுவதாலோ, கிண்டல் செய்வதாலோ, நையாண்டி செய்வதாலோ, நாம் பயப்படத் தேவையில்லை.

அதேபோன்றுதான் சிதம்பரம் தேர்தலைக் காட்டியும் பார் - பார் சிதம்பரம், அழிந்தார்கள்—ஒழிந்தார்கள் என்று ஆர்பரிக்கிறார்கள். அங்கே என்ன அழிந்தோம். அங்கே இருந்ததை இழக்கவில்லையே! காங்கிரசார் இருந்ததை மீண்டும் பெற்றிருக்கிறார்கள். இதில் எப்படி நாம் அழிந்து விட்டோம். அங்கு என்ன நடந்தது. நம்முடைய நிலையென்ன? அவர்கள் நிலையென்ன? அவர்களுக்கிருந்த வசதி என்ன அதிகார பலம், ஆட்சி பலம், பணபலம், பிரச்சார பலம், செல்வாக்கு முதலியவைகளோடும் அமைச்சர்களே அதிகாரிகளின் துணையோடு பிரச்சாரம் செய்ததாலும் சிதம்பரத்தில் வெற்றி பெற்றார்கள்.

நாமோ சாதாரண நிலையில் எந்த வசதியும் இல்லாது அன்னக் காவடிகளாக—உண்டியல் பிச்சைக்காரர்களாக நின்றோம். அவர்களுக்குப் பெரியாரின் சூறாவளிப் பிரச்சாரமும் இருந்தது. அதுமட்டுமா! காமராசர், சுப்பிரமணியம், கக்கன் முதலிய அமைச்சர்கள் ஊர் ஊராகச் சுற்றினார்கள், காங்கிரஸ் அங்கத்தினர்கள் என்ற முறையில் சுற்றி இருந்தால் நமக்குக் கவலையில்லை. சென்னை சர்க்காரின் அமைச்சர்கள் என்ற முறையில், அந்தப் பகுதிகளிலுள்ள எல்லா உயர்தர அதிகாரிகள் புடைசூழ, போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் மோட்டார் சைக்கில்களில் முன்னாலே வழிகாட்ட போலீஸ் படைகள் துணைக்கு வர தேர்தல் பிரச்சாரம் செய்தால் மக்கள் மனநிலை எப்படி இருக்கும்? அதுவன்றி இது ஜனநாயகமுமாகுமா? நாம் சாதாரண கழகத்துக்காரர்களாகப் பிரச்சாரம் செய்தோம். அவர்கள் அதிகாரத்தை வைத்துப் பிரச்சாரம் செய்தார்கள். மந்திரிகள் இவ்வளவு ஆடம்பரத்துடனும், பாதுகாவலுடனும் செல்லும்போது, நமது கார்கள் நடுவே சென்றால், 1 மணி நேரம் அதிகாரிகள் நிறுத்தியும் விடுவார்கள். இவ்வளவு வசதி படைத்து சிதம்பரத்தில் வேலை செய்தார்கள்.

எஞ்சினியர்களைக் கொண்டு, சாலைகளை—பாலங்களை அந்த நேரங்களில் செப்பனிடச் செய்து மக்களிடையே ஒருவித செல்வாக்கு ஏற்படும்படியான நிலையில் சிதம்பரத்தில் தேர்தல்

9)ம் பக்கம் பார்க்க)

பாண்டிச்சேரி தோல்வியால் நமக்கு லாபமே தவிர நஷ்டமில்லை

நெடுஞ்செழியன் பேச்சு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சாரத்தில் இறங்கினார்கள்: பல ஆசை வார்த்தைகளை மக்களிடம் கூறி, ரோடுகள் செப்பனிடுவதாகவும், பாலங்கள் அமைப்பதாகவும், ஆஸ்பத்திரி திறப்பதாகவும் வாக்குறுதிகளும் ஆசை வார்த்தைகளும் கூறி வந்ததோடு அவர்கள் அதிகாரிகளை வைத்து மிரட்டியும், பயமுறுத்தியும் தேர்தல் பிரச்சாரம் செய்து வந்தார்கள்.

இவர்களுடன், கலெக்டர்கள், டிப்டிக் கலெக்டர்கள், தாசில்தார்கள், ரெவினியூ அதிகாரிகள் மணியக்காரர்கள், நாட்டாண்மைக்காரர்கள், கல்வி அதிகாரிகள், பிர்க்கா டெவலப்மெண்ட் அதிகாரிகள். சுகாதார அதிகாரிகள், போன்றவர்களை உடன் அழைத்துக்கொண்டு மக்களிடம் போய் ஓட்டுக் கேட்பது, தேர்தல் பிரச்சாரம் செய்வது போன்ற காரியங்கள் செய்தார்கள். இது தான் ஜனநாயகமா? ஜனநாயகப்படி நடப்பவர்கள் என்று கூறுவது உண்மையானல் நாங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகும்போது எங்களுக்கு முன்னால், அதாவது ஜீவானந்தம் கார் முன் ஒரு சப் இன்ஸ்பெக்டர், என் கார் முன் ஒரு சப் இன்ஸ்பெக்டர், மற்றும் சின்னத்துரை கார் முன் ஒரு சப் இன்ஸ்பெக்டர் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரச்சாரத்திற்கு போகும்போது அனுப்புவார்களா? எங்கள் பின்னால் அதிகாரிகள் புடைசூழ வருவதற்கு அனுமதிப்பார்களா. இம்மாதிரி காரியங்களைக் கண்டித்து தேர்தல் பிரதம அதிகாரி சென் அவர்கள் பேசியிருக்கிறார்,

தேர்தல்களில் அமைச்சர்கள் ஈடுபடக்கூடாதென்றும், அவர்கள் தேர்தல் சமயங்களில் மக்களிடம் வாக்குறுதிகள் தரக்கூடாதென்றும், அதிகாரிகளை உடன் அழைத்துச் செல்லக்கூடாதென்றும், அவர் சொல்லியிருக்கிறார்.

கேரளாவில் ஒரு இடைத்தேர்தல் நடைபெற்றது. அதில் கம்யூனிஸ்டும் காங்கிரசும் போட்டியிட்டது. அப்போது கேரளாவில் கம்யூனிஸ்டு அரசாங்கம் இருந்தது. அந்த இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட்டு தோற்றால் அவர்கள் அரசாங்கம் கவிழ்ந்துவிடும். ஒரு அங்கத்தினர் பலத்தில் அங்கு அரசாங்கம் நடந்து வந்தது. இருந்தும் அப்போது அங்கிருந்த கம்யூனிஸ்ட்டு அமைச்சர்கள் அந்த தேர்தலில் ஈடுபடவில்லை, பிரச்சாரம் செய்யவில்லை, சாதாரண கம்யூனிஸ்ட்டு தொண்டர்கள்தான் போனார்கள் அதுவல்லவா ஜனநாயகமுறையில் தேர்தல் நடத்துவது. சிதம்பரத்தில் ௨ மந்திரிகளைத் தவிர 6 மந்திரிகள் வந்திருந்தார்களே! மந்திரி வெங்கட்டராமன் வெளி நாடு சென்றிருந்தார், மந்திரி லூர்தம்மையார் ஏதோ காரணமாக வரவில்லை.

மந்திரிகள் மக்களிடம் வசதி செய்து தருவதாக வாக்களிப்பதுபோன்று நாங்கள் அளிக்க முடியுமா? நம்புவார்களா? இருக்கும் அதிகாரங்களை தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்ற நோக்குடன் துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள்.

உதாரணம் வேண்டுமானால் லால்பேட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு நிதி அமைச்சர் பள்ளிகள் அமைப்பதாக வாக்குறுதி அளித்தார்! பல ஆண்டுகளாக காங்கிரசை எதிர்த்து வாக்களித்த லால்பேட்டை முஸ்லீம்கள் இந்தத் தேர்தலில் காங்கிரசுக்கு வாக்களித்தார்கள். 57ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரசை எதிர்த்தவருக்கு ஓட்டளித்தார்கள் இதன் காரணம் என்ன?

இந்தத் தேர்தலில் பயமுறுத்தலால் — மந்திரிகள் வாக்குறுதிகளால் — அதிகாரம் கையில் வைத்து அதிகாரிகளோடு பிரச்சாரம் செய்ததால் வெற்றி பெற்றார்கள். அங்கு பல பணக்காரர்கள், பஸ்ரூட் பெர்மிட்காரர்கள், காண்ட்ராக்டர்கள், வாக்கிசம் பிள்ளை, இளைய பெருமாள் போன்ற பல செல்வாக்கு படைத்தவர்களின் தந்திரம், சூழ்ச்சி, ஆசை வார்த்தைகள் போன்றவைகளை நடத்தி, வெற்றி பெற்றார்கள். நமக்கு நமது சாமான்யமான திரு. கோவிந்தசாமி அவர்கள் செல்வாக்கைக் கொண்டும் நமது பிரச்சாரத்தைக் கொண்டும் வேலை செய்தோம், பலவித வாய்ப்பு வசதிகளைக்கொண்டிருந்த அவர்களை எதிர்த்து, எந்தவிதமான வசதிகளற்றிருந்த நாம் குறைந்த ஓட்டுகளால் தோல்வியுற்றோம். சிதம்பரம் போன்ற நகரங்களில் அவர்கள் பெற்ற ஓட்டுகள் குறைவுதான் கிராமங்களில் — சிற்றூர்களில் மக்களை மிரட்டி, ஆசைவார்த்தைகள் கூறி ஓட்டுகள் பெற்றார்கள், அதுமாத்திரமா? மதுரை ஜில்லாவில் காந்தி கிராமம் என்ற இடத்தில் அனாதைகளுக்காக ஒரு ஆஸ்ரமம் நடத்துகிறார்கள். அதற்கு மாநில சர்க்கார் — மத்திய சர்க்கார் மான்யங்கள் அளிக்கிறார்கள். பல நகர மன்றங்கள் உதவி நிதியளிக்கிறார்கள், அங்கு அனாதைப் பெண்களுக்கு கல்வி, தையல், பின்னல் கூடை முடைதல் போன்ற கைத்தொழில்களைப் பயிற்றுவிக்கிறார்கள். அந்த அனாதைப் பெண்களை அதிகாரம் இருக்கிறதென்ற எண்ணத்தால் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுத்துகிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற சிதம்பரம் — அருப்புக்கோட்டை தேர்தல்களில் ஈடுபடுத்தினார்கள் இது சரியா?

அந்த அனாதைப் பெண்கள் சிதம்பரத்தில் வீடு வீடாகச் சென்று தாய்மார்களிடம்

'அம்மா நாங்கள் அனாதைகள், திக்கற்றவர்கள் எங்களுக்கு இந்த காங்கிரஸ்காரர்கள் ஆதரித்து படிப்பு சொல்லிக் கொடுக்கிறார்கள்' அவர்ளுக்கு ஓட்டுப் போட்டால் எங்களைப் போன்ற அனாதைகளுக்கு ஆதரவாக இருக்கும் என்று கூறினால் தாய்மார்கள் உள்ளம் இளகுமா இளகாதா? சர்க்கார் மான்யங்களின் உதவியால் பயிலும் மாணவிகளை ஏன் தேர்தலுக்கு அழைத்து வருகிறீர்கள்! இது சரியா? ஜனநாயகமா என்று கேட்டால் பெண்களுக்கு ஓட்டுப் போடும் முறையைப் போதிக்க அழைத்து வந்தோம் என்கிறார்கள். அப்படியானல் உங்கள் பக்கம் 50 பெண்கள் பிரச்சாரம் செய்தால் எங்கள் பக்கம் 50 பெண்களைப் பிரச்சாரத்திற்கு அனுப்புகிறீர்களா! அப்படிச் செய்தால் அது நீதி, ஜனநாயகம், காங்கிரஸ் கட்சிப் பணத்தைக் கொண்டு நடக்கும் பள்ளியில் பயிலும் பெண்களை அழைத்து வந்தால் நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம். எங்கள் வரிப்பணத்திலிருந்து மான்யமாகப் பெற்றிருக்கும் பள்ளியிலிருந்து பெண்களை பிரச்சாரம் செய்விப்பது சரியா?

உண்மையும், நேர்மையும் சத்தியமும் கொண்ட உத்தமர்களான காந்தியார் அவரது துணைவியார் கஸ்தூரிபா பெயரால் நடைபெறும் ஸ்தாபனத்திலிருந்து அழைத்து வந்து அவர்களுக்கு இழுக்குத் தேடுகிறீர்களே இது சரியா? அதிகாரம் தங்கள் கையில் இருப்பதனால் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணமா? இப்படியெல்லாம் செய்தும், அமைச்சர்கள் செல்வாக்கையும், பண பலத்தையும், தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் உபயோகித்தும் அதிகாரங்கள், அதிகாரிகள் ஒத்துழைப்பு இவைகளை துணையாக வைத்தும் அவர்கள் பெற்ற வாக்குகள் 50000. எந்தவித வாய்ப்புகள், பிரச்சார பலம், வாகன வசதிகள், பண பலம் செல்வாக்கு இவைகள் எதுவும் அற்று நாம் பெற்ற வாக்குகள் 40,000. இது எப்படிப் பெற முடிந்தது! நாம் மக்களிடம் செல்வாக்கு பெற்றிருக்கிறோம் என்பதைத் தவிர வேறுஎன்ன? ஆகவே வளர்ந்திருக்கிறோம், வளர்ந்து வருகிறோம். இப்படி வளர்கின்ற நம்மை கேலியும், கிண்டலும் செய்பவர்களைப் பற்றி கவலைப்படாதீர்கள்,

சுதந்திரா கட்சியால் நாம் அழிந்துவிடுவோம் என்று கூறுகிறார்கள் அப்படியாவது கூறி மகிழ்ந்து கொள்ளட்டும், சுதந்திராக் கட்சியால் காங்கிரஸ் அழியும், வீழ்ந்து விடும், செல்வாக்குக் குறையும், காங்கிரசிலிருந்த பல வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பெரிய மனிதர்கள் சுதந்திரா கட்சியில் ஆச்சாரியாருடன் சேர்ந்து விட்டார்கள்.

காங்கிரசை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தவர்கள் இன்று சுதந்திரா கட்சியில் இருக்கிறார்கள் அவர்கள் எப்பொழுதும் நமக்கு ஆதரவு தந்தவர்கள் அல்ல! காங்கிரசுக்கு ஆதரவு தந்தவர்கள் அதனால் அவர்கள் வீழ்வார்கள் — அழிவார்கள். கும்பகோணத்தில் ஆச்சாரியார் தி மு, க.வை அழைத்தார் என்பதை வைத்துக் கூறுகிறார்கள்.

அவர்கள் தி. மு. காவை மட்டும் அழைக்கவில்லை காமராசரை அழைத்திருக்கிறார். ஏன் பண்டித நேருவையும் அழைத்திருக்கிறார், முஸ்லீம் லீக்கையும் அழைத்திருக்கிறார், அதுபோலவே நம்மையும் அழைத்திருக்கிறார். நம்மோடு யாரும் சேரமாட்டார்கள். மற்ற கட்சிகள் போல் ஒருவரை உடனே சேர்த்துக் கொள்ளும் முறையோ, ஒருவர் உடனே சேர்ந்துக் கொள்ளும் வகையில் இல்லை, அவர்கள் கொள்கை முறை வேறு, நமது கொள்கையின் அடிப்படை வேறு. நம்மிடம் வருபவர்கள் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து வந்து சேரவேண்டும். நம்மிடம் யாரும் லகுவில் வந்து சேர முடியாது. நாம் கொண்டுள்ள, எண்ணத்தில் மாறுதவர்கள் நம்மையும் யாரும் சேர்க்க மாட்டார்கள்.

இதை ஆச்சாரியாரே திருச்சியில் கூறிவிட்டார். தி. மு. க. வும், கம்யூனிஸ்டுகளும் சுதந்தரக் கட்சியில் சேரமாட்டார்கள் என்று, ஆகவே மற்றவர்கள் கூறும் பிரச்சாரத்தைக் கண்டு கவலைப்பட வேண்டியதில்லை. எந்தக் கட்சி வந்தாலும், நமக்கு கேடு ஏற்படாது.

ஆகவே நம்மைப்பற்றி தூற்றுபவர்கள் தூற்றட்டும், நீங்கள் எல்லாம் ஒற்றுமையுடனும், கண்ணியத்துடனுமிருந்து கழகத்துக்கு ஆதரவு தர வேண்டுகிறேன்.

வரவேற்கவேண்டிய தலைவர்கள் வந்துவிட்டார்கள், அவர்களுக்கு வரவேற்பு அளியுங்கள் — அதுவரை அமைதியாக இருக்கக் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

——

நாம் சுழல் விளக்கு போல் சுற்றி சுற்றிப் பேசுகிறோம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

(அண்ணா பேச்சு)

வசிக்கின்ற இடங்களைப் பார்க்கிறார்கள். இது ஒன்றும் ஆச்சர்யப் படத்தக்கதல்ல!

இங்கே இருப்பவர்கள் அரண்மனையில் பிறந்தவர்கள் அல்ல—மாடமாளிகையில் நடமாடியவர்களுமல்ல! மண் குடிசையிலே, சாதாரணமான குடும்பத்திலே பிறந்தவர்கள்!

இதற்குமுன்பெல்லாம் மேயரை பார்க்க வேண்டுமென்றால்—கார் வேண்டும், நாலைந்து மைல் தூரம் போகவேண்டும். பங்களாவுக்கு முன் கேட்டிலே இருக்கும் காவற்காரனைப் பார்த்து 'ஐயா இருக்கிறாரா'என்று கேட்க வேண்டும். அவன் இருக்கிறார் என்று சொன்னதற்குப் பிறகு உள்ளே போகவேண்டும். வழியிலே இருக்கும் அல்சேஷியன் நாய்க்கு சமாதானம் சொல்லி விட்டு உள்ளே சென்று உட்கார வேண்டும். பிறகு எஜமானி அம்மா வருவார். 'ஐயா இருக்கிறாரா' என்று கேட்டால்,'பார்க்க முடியாது போ! போ!! என்று அந்த அம்மா கூறியபின் திரும்ப வேண்டிய நிலை!

இப்போதுள்ள மேயர் அப்படிப்பட்டவரல்ல! உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி கூப்பிடுகிறவர்!

'சின்னசாமி சௌக்கியமா? இந்த வீதியிலே இருக்கும் சாக்கடை இப்போது எப்படி இருக்கிறது?' என்று கேட்கிறவர், சாக்கடை நீர் நாற்றமெடுக்கிறது—சாக்கடை சரியாக இல்லையென்றால் ஏன் இதைச் சொல்லவில்லை என்று கேட்கின்ற மனமுடையவர்!

முன்பிருந்த மேயர்கள் மேட்டுக் குடியினரைச் சேர்ந்தவர்கள். பளப்ப பளப்பாக வாழ்ந்தவர்கள். பட்டுப் பீதாம்பரத்திற்குச் சொந்தக்காரர்கள்! இப்போதுள்ள மேயர் அப்படிப்பட்டவரல்ல!

இப்போது நான் இருப்பது போலவே சட்டையும் வேட்டியையும் அணிந்து கொண்டிருந்தார். நான் தான் கூப்பிட்டு இது தேவை இல்லை இப்படித் தான் இருக்க வேண்டுமென்று கூறினேன், (மேயர் கோட்டும் சூட்டும் அணிந்திருப்பதை சுட்டி காட்டி) அதற்குப் பிறகுதான் இந்தக் கோலம்!

இப்போதுள்ளவர்கள் நம்மோடு சேர்ந்து வளரும் ஏழைக் குடும்பத்திலே வாழ்பவர்கள், நமக்கு இருக்கிற சுக துக்கங்களில் பங்கு கொள்ளும் பண்பு கொண்டவர்கள்!

எனக்குள்ளே நான் எண்ணிக் கொண்டேன்: இதற்கு முன்னாலே இருந்தவர்கள் பூமிக்கடியிலே கடை வீதிகளை அமைக்க வேண்டுமென்று கூறினார்கள். எனக்கு ஆச்சர்யமாகவே இருந்தது. பாரீஸ் நகரத்திலும், லண்டன்மாநகரத்திலும்பூமிக்கடியில் அலங்காரக்கடை வீதிகள் இருக்கின்றன. இது அவர்களுக்கு தெரிந்திருக்கிற காரணத்தாலே பாதாள மாயா பஜார் அமைக்க வேண்டுமென்று நினைத்தார்கள். இது நமக்கு தெரியாததுமல்ல!

மாலை வேளையிலே சீமான்களும் சீமாட்டிகளும் பாதாள அலங்கார கடை வீதிகளில் பவனி வர வேண்டும் என்பது தான் அவர்களது திட்டத்தின் முதல் காரணம்.

சீமான்கள் அலங்கரிக்க வேண்டிய அலங்காரமான பதவியை நடைபாதையிலே வாழ்வோர் வகிப்பதா என்று ஆத்திரப்படுகிறார்கள். சீமான்களுக்கு இது கோபத்தையும் உண்டாக்கியிருக்கிறது!

பிச்சைக்காரன் தொழு நோய் பிடித்தவன், கோயில் கோபுர வாசலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

காதிலே வைரத் தோடும், விரல்களிலே வைர மோதிரமும் போட்டுக்கொண்டு—வெள்ளித் தட்டிலே தேங்காய் பழத்தை வைத்து வேலைக்காரன் எடுத்துக் கொண்டு பின்னால் ஓடிவர ஆண்டவனை தரிசிக்க செல்லும் பணக்காரன் ஆண்டவனைப் பார்த்து—'ஆண்டவனே! ஏன் இந்தப் பிச்சைக்காரர்களை படைத்தாய்' என்று கேட்டானும்!

அப்போது தொழு நோய் பிடித்த பிச்சைக்காரன் 'ஆண்டவனே! பிச்சைக்காரனை படைத்ததுதான் படைத்தாய்—ஏன் சீமானையும் படைத்தாய்?' என்று மனமுடைந்து கேட்டானும்.

ஆண்டவன் பிச்சைக்காரனை பரிசோதிக்க எண்ணி பிச்சைக்காரனை சீமானாக்கினாராம்! பிச்சைக்காரன் சீமானாகிவிட்டதும் ஆண்டவனை நோக்கி—

'ஆண்டவனே பிச்சைக்காரனாக இருந்த என்னை சீமானாக்கினாய். இந்த பிச்சைக்காரர்களை என் கண்ணில் படும்படி ஏன் படைத்தாய்' என்று கேட்டானும். ஆண்டவன் அவனை பழையபடி பிச்சைக்ககரனாக்கினாராம்! பாடம் போதிக்க இப்படி ஒரு கதை உண்டு, புராணத்தில்!

அலங்காரமான பதவி என்று நினைத்த சீமான்கள், நம்மவர்கள் மேயரானதும் நம் கட்சியைப் பார்த்து ஏசிப் பேசி வருகிறார்கள்,

சேரி மக்களுக்கும், நடைபாதையில் வாழ்வோருக்கும், நன்மை புரிய நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மேயரும்—துணை மேயரும் நம் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கபபட்டிருக்கிறார்கள்,

மேயரும்—துணை மேயரும் கட்சி கொள்கையிலே நம்பிக்கை வைத்துக்கொண்டிருப்பவர்கள். கட்சிக்காகவும், கொள்கைக்காகவும் உழைப்பவர்கள், சிறைச்சாலைக்கு சென்றவர்கள் தடியடி பட்டவர்கள். ஏழைகள் துயரை உணர்ந்தவர்கள் என்ற காரணத்தாலேதான் அவர்களுக்கு நடைபாதையிலே வாழ்வோருக்கு வாழ்வளிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியிருக்கிறது. அவர்கள் ஆர்வத்தோடு திட்டம் தீட்டியிருப்பது கண்டு பாராட்டுகிறேன். இதனால், ஏற்கெனவே அவர்களிடம் இருந்த மதிப்பு ஒன்றுக்கு பத்தாக வளர்ந்திருக்கிறது!

ஏற்கெனவே நான் பெத்து நாயக்கன்பேட்டையில் கௌன்சிலர் தேர்தலுக்கு நின்றேன். அப்போது தெருவுக்கு இரண்டு விளக்குகள் போடப்பட்டிருக்கும் ஒரு கோயிலுக்குமுன் அலங்கார விளக்குகள் போட்டிருந்தார்கள். இப்போது உள்ளது போல் தெருவிலே அலங்காரமான விளககுகள் அன்று இல்லை!

அப்போது காங்கிரஸ்காரர்கள் எனக்கு எதிர்ப்பாக நோட்டீஸ் ஒன்று போட்டாாகள். அதில்—'அண்ணாத்துரை படித்தவன்—அவனுக்கு நீங்கள் ஓட்டு போட்டால் ஆலய விளக்குகளை எடுத்து விடுவான்' என்று நோட்டீஸ் போட்டார்கள்.

நான் ஒரு கூட்டத்தில் பேசும் போது, 'நீங்கள் வெற்றி பெற்றால் கோயில் விளக்குகளை எடுத்து விடுவீர்களாமே உண்மைதானா?' என்று கேட்டார்கள்.

'உண்மைதான்! சென்னையிலே உள்ள சேரிகளுக்கும் ஏழை மக்கள் வசிக்கின்ற வீடுகளுக்கும் மின்சார விளக்குகள் போட்ட பிறகு கையிலே மிச்சம் பணமிருந்தால், பல்புகள் இருந்தால் ஆண்டவனுக்கு விளக்கு போட முடியும்!

இருண்டு கிடக்கும் சேரிகளிலும், சந்துகளிலும் விளக்குகள் போடாமல் ஆலயத்திற்கு மட்டும் விளக்குப் போட்டால் ஊருக்கு மட்டுமல்ல, அது, ஆண்டவனுக்கே துரோகம்' என்று சொன்னேன்!

'அப்படியானால், உனக்கு ஓட்டு இல்லை' என்றார்கள்,

'நானும் மெத்த சரி' என்றேன்,

இப்போது மேயர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பைத் தர வேண்டும். ஒத்துழைப்பு என்றால் தினம் இரண்டு தடவை மேயரை சந்தித்து, இன்ன ஆளுககு இந்த வேலை கொடுங்கள் என்று கேட்கக்கூடாது. நீங்கள் அப்படிக் கேட்டாலும், வேலை கொடுக்கின்ற அதிகாரம் அவர்களுக்கு கிடையாது.

அதைவிட்டு எங்கள், வீதியிலே நாலு நாட்களாக சாக்கடை நாற்றமெடுத்துக் கொண்டிருக்கிறது. 'சேனட்டரி இன்ஸ்பெக்டர்' வரவில்லை. அதற்கு வழி செய்யுங்கள்!

எங்கள் வீட்டிலிருக்கும் குழாய் தானாக வழிந்து கொண்டே இருக்கிறது என்று கூறி மேயரை அழைத்து உங்கள் குறைகளை சொல்ல வேண்டும். மேயரையா அழைப்பது என்று பயப்பட வேண்டாம். அப்துல்காதர் என்று நினைத்து அழையுங்கள்! கார்ப்பரேஷன் அதிகாரிகளை அழைத்து உங்கள் தொகுதிகளை சீர்படுத்திக் கொள்ள வேண்டும்,

அந்த வழியிலே நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்—பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இப்படிப் பாராட்டு நடத்துவது காங்கிரஸ்காராகளுக்கு, குறிப்பாக காமராசருக்கு ஆத்திரமும்—ஆயாசமும் ஏற்படுகிறதென்று அருமை நண்பர் ஆசைத்தம்பி எடுத்துக் கூறினார்.

இப்போது பத்திரிகையிலே ஆச்சரியப்பட்டு எழுதுகிறார்கள்—

'இன்று காமராசர் ஒரு மணி நேரம் பேசினார்' என்று முன்பெல்லாம் காமராசர், பட்டு தெரித்தாற்போல் நாலு வார்த்தை பேசி முடித்துக் கொள்வார். நீங்கள் வேண்டுமானால் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் காமராசர் அடுத்த ஆண்டு இரண்டு மணி நேரம் பேசுவார்! மற்றவர்கள் பத்து நிமிஷம் பேசுவதைத் தான் அவர் ஒரு மணி நேரம் பேசுகிறார்!

நீங்கள், குழந்தையை கொஞ்சும் போது கண்ணே என்பீர்கள். முத்தே என்பீர்கள். என் ராஜா என்பீர்கள். மறுபடியும் அதையே தான் கண்ணே, முத்தே, ராஜா என்று கூறுவீர்கள். சினிமாவில் வேண்டுமானால் பூங்கொத்தே—நிலவே என்பார்கள். வாழ்க்கையில், சினிமாவில் பேசுவது போல் பேச முடியாது கண்ணே, ராஜா என்று தான் கூறுவீர்கள் இன்று காமராசர் ஒரு மணி நேரம் பேசினார் என்பதும் இதைப் போல் தான்! சொன்னதையே, திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார். அவர் சொல்லும் முதல் விஷயம்—

'தி, மு. க. கட்சி—நல்ல கட்சி இல்லை' உலகத்தில் யாரும் கண்டு பிடிக்க முடியாததை கண்டு பிடித்து சொல்வது போல் 'எங்கள் கட்சி (தி.மு.க.) நல்ல கட்சி இல்லை' என்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோவுக்கு அடிமையாகும் கட்சி!

பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்காரர்கள் கற்பனை உலகிலே சஞ்சரிக்கிறவர்கள்!

சோஷலிஸ்ட் கட்சி சமதர்மத்தை தேடுகிற கட்சி!

'என்று கூறுவார். அதற்குப் பிறகு—திராவிட முன்னேற்றக் கழகமா—அது ஒரு கட்சியா? நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று கூறுகிற கட்சி, ஒரு கட்சியாகுமா? என்றார்.

உங்கள் வழிகாட்டி—ஞானசிரியர் ஆச்சாரியார் ஆரம்பித்திருக்கிறாரே சுதந்திரா கட்சி அது என்ன கட்சி என்று கேட்டு விடுவோம் என்று எண்ணி—

'அது ஒரு கட்சியா? பிழைக்குமா? பல் 'போன கிழவர்கள் கட்சி' என்று அவர் என்னமோ பால பருவத்தில் இருப்பது போல் நினைத்துக் கொண்டு கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சி நல்ல கட்சி என்றால், ஆளுங்கட்சிக்கே உரித்தான தென்றால் ஏன் இத்தனைக் கட்சிகள்?

கார் உள்ளளவும்—கடல் நீர் உள்ளளவும்—எங்கள் பெயர் உள்ளளவும் நாங்கள்தான் இருப்போம்—மக்கள் மடியிலேயிலே இருப்பதை எடுத்துக் கொள்வோம். என்றால் ஏன் கூட்டம் போட்டு மற்ற கட்சிகளை திட்டவேண்டும்?

(11-ம் பக்கம் பார்க்க)

அம்மன் வரம் தருமா, தராதா என்று பூசாரிக்குத் தான் தெரியும்!

காங்கிரசின் ஊழல் நம்மைவிட ஆச்சாரியாருக்குத்தான் அதிகம் தெரியும்!

[அண்ணா பேச்சு]

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பக்கத்தில் கட்சி இருக்கட்டும் என்று கூறிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உதய சூரியன் சின்னமும், கம்யூனிஸ்டுகளுக்கு அரிவாள் சுத்தியும், மற்ற மற்ற கட்சிகளுக்கு தேர்தல் சின்னங்கள் தருவானேன்? தேர்தல் முடிந்த பிறகு கூட்டம் போட்டு மற்றக் கட்சிகளைத் தாக்கிப் பேசுவானேன்?

மாமன் மகள் திருமணத்திற்கேற்ற பருவத்தில் இருக்கிறாள். அவளை மணக்க மாரிமுத்து வருகிறான்! முனுசாமி பார்க்க வருகிறான். அப்போது மாரிமுத்துவுக்கு கண் ஓட்டை, முனுசாமி கால் நொண்டி என்று கூறினால் என்ன அர்த்தம்?

கால் நொண்டி—கண் ஓட்டை என்று கூறுவதைவிட 'எங்கள் பெண் மாமன் மகனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள்' என்று சொல்லிவிடலாம்! அதைப் போல் காமராசர் மற்றக் கட்சிகளை ஏசிப்பேசி வருகிறார். இப்படி பேசுவது ஜனநாயகத்திற்கே விரோதமானது — உண்மைக்கு புறம்பானது!

'அந்தக் கட்சியா? அதில் நீ சேராதே!' என்று கூறி வருகிறார்!

ஒரு கட்சி நல்லதா, கெட்டதா என்று யார் சொல்ல வேண்டும்? கட்சியிலே சேருகிறவர்கள் சொல்ல வேண்டும்!

இந்தக் கடையிலே சரக்கு எப்படி என்று, எதிர்கடைக்காரனை கேட்டால் மக்கல் சரக்கு என்பான்.

இந்தக் கடைக்காரனை அது எப்படி என்று கேட்டால் ஊசல் சரக்கு என்பான்.

ஒரு அரசியல் கட்சி நல்லதா கெட்டதா என்று மக்கள்தான் கூற வேண்டும்.

எது நல்ல கட்சி என்று மக்கள் தீர்மானித்தார்கள். அதன் விளைவு தான் இப்படிப்பட்ட மாபெருங்கூட்டம்! ஆகவேதான் நாம் சுழல்விளக்குபோல் இந்தக் கோடியில் இருப்பவர்களுக்கும், அந்தக் கோடியில் இருப்பவர்களுக்கும் கேட்க வேண்டுமென்று நினைத்து சுற்றி சுற்றிப் பேச வேண்டியிருக்கிறது?

காமராசருக்கு அப்படி இல்லை, கொஞ்சமும் ஆடாமல் அசையாமல் நேராக பார்த்து, போலீஸ்காரர்கள் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா, இல்லையா என்று பார்த்துப் பேசுகிறார்.

எங்கள் கழகம் நாளுக்கு நாள் வளர்கிறது! எங்கள் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது!

பத்து வருடத்திற்கு முன் கொட்டகை போடக் கூட பணமில்லாமல் வெட்ட வெளியில் கூட்டம் போட்டோம், கொட்டும் மழையிலே நம் கட்சியைத் துவக்கினோம். துவக்கிய கட்சி இப்படி வளரும் என்று நம்பிக்கை எனக்கே இல்லை!

நான், எல்பின்ஸ்டன் தியேட்டரில் 'டிஸ்ரேலி' என்னும் படத்தைப் பார்த்தேன்!

அதில், பிரிட்டிஷ் அரசியலையே கவிழ்த்து விட்டு மந்திரி பொறுப்பேற்கிறான். ஆட்சியை கைப்பற்றிய அவன், நண்பனிடம் 'என்னாலே இந்த பொறுப்பை கட்டிக் காக்க முடியுமா? எனக்கு பயமாக இருக்கிறது' என்றான், கழகத்தை துவக்கிய நேரத்தில் அந்த சம்பவம் தான் நினைவுக்கு வந்தது. புதிய கட்சியை துவக்கிய நேரத்தில் ஒரு பக்கத்தில் பெரியார் ராமசாமி, இன்னொரு பக்கத்திம் பத்திரிகை பலம் படைத்த, பண பலம் படைத்த, அதிகார பலம் படைத்த காங்கிரஸ் கட்சி, மற்றொரு பக்கத்தில் கம்யூனிஸ்ட் ஒரு கையில் அறிவாளையும் மற்றொரு கையில் கத்தியையும், வைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டிருந்தார்கள். இத்தனைக்கு பிறகும் பிழைக்க முடியுமா என்று நினைத்தேன்.

நம் கழகத்தில் என்னை விட இளைஞர்கள் அதிகம், நான் மனந்தளர்ந்த காலத்தில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று தைர்ய மூட்டினார்கள், அம்மன் கோயிலில் சிலம்பம் ஆடும் போது பார்த்தால் உங்களுக்குத் தெரியும். ஒருவன் ஆடினால் பத்து பேர் ஆமாம் ஆமாம் என்பார்கள். அதைப் போல்,

சென்ற தேர்தலில் நமக்கு யார், யார் எதிரிகள்? நம்மை கம்யூன்ஸ்டுகள் எதிர்த்தார்கள், அதிலும் திராவிட கழகத்தைச் சார்ந்தவர்கள் ஓடி ஓடி எதிர்த்தார்கள்.

நான் காஞ்சிபுரத்தில் நின்றேன். என்னை எதிர்த்து போட்டியிட்டவர் பார்ப்பன தோழர்! சிலர் 'அண்ணாத்துரைக்கு பரவாயில்லை. அவரை எதிர்ப்பவர் பார்ப்பனர். பெரியார் இங்கே வர மாட்டார். அந்த மட்டில் அண்ணாத்துரை அதிர்ஷ்டசாலி' என்று நினைத்தார்கள்.

'காங்கிரஸ் பெரிய கூட்டம் நடத்தப் போகிறார்கள். அதில் பெரியாரும் பேசப் போகிறார்' என்ற செய்தியை கார்டில் எழுதி, எங்களூர் திராவிடர் கழகத்திற்கு அனுப்பியிருந்தார்கள்.

என் ஊரில் ஒரு பழக்கம்-திராவிடர் கழகம் என்று முகவரி இருந்தாலும், இவர்களும் அவர்களும் ஒன்று தான் என்று நினைத்தோ என்னவோ திராவிடர் கழகம் என்றாலும் எங்கள் வீட்டிலே கொடுதது விட்டு போய் விடுவார்கள். நான் அந்த கார்டை, அங்கு ஒரு கூட்டததில் பேசும் போது படித்துக் காட்டினேன். அதை உரியவரிடமும் சேர்த்து விட்டேன்.

இப்படி எல்லாக் கட்சிகளும் எதிர்த்தபோதும் நாம் பதினேழு லட்சம் வாக்குகள் பெற்றோம், காமராசர் போடும் கணக்குப் படி பார்த்தால் இது வளர்கின்ற கட்சியா, தேய்கின்ற கட்சியா?

காங்கிரஸ் ஐம்பது லட்சம் வாக்குகளைப் பெற்றது. பத்து வருடத்தில், பலரின் எதிர்ப்பிலும் காங்கிரஸ் பெற்ற மொத்த வாக்கில் மூன்றில் ஒரு பங்கு பெற்றோம்!

பன்னிரெண்டு வயதுடைய பையனுக்கு சிவஞானத்திற்கு இருப்பது போல் மீசை யென்றால், பையன் சிவஞானம் அளவு வளர்ந்தால் மீசைக்கு சடைபோட வேண்டி வரும். இதைப் போல் காமராசர் இப்போதே பதினேழு லட்சம் என்றால், வளர்ந்தால்? எப்படி இருக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்க்கிறார்! அதன் வளர்ச்சி அவர் கண்களுக்குத் தெரிகிறது. அதனாலே தாக்கிப் பேசுகிறார்!

நம் கழகத்தில் பெரும்பாலோர் இளைஞர்கள். மேயர், துணை மேயர் எல்லோருமே இளைஞர்கள். இங்கே ஷண்முகம் அவர்களும் நானும் பெரியவர்கள், ஐம்பது வயதைத் தாண்டியவர்கள், மற்றவர்கள், ஓடுகின்ற பாம்பை பிடிக்கின்ற வயது, கல்லைத் தின்றால் ஜீரணிக்கும் வயது' என்று கூறுவார்களே அப்படிப்பட்ட இளைஞர்கள்.

நாம் கழகத்தை ஆரம்பித்த போது ஆசைத்தம்பிக்கும் அன்பழகனுக்கும் சண்டை வரும், நெடுஞ்செழியனுக்கும் சம்பத்துக்கும் தகராறு வரும் என்று எண்ணினார்கள்! பார்! பார் ஒழித்து விடுகிறோம் என்று முயற்சித்தார்கள், முடியாத வேலை என்று எண்ணித்தான் இப்போது திட்டித் தீர்க்கும் வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

நான் தமிழகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த வரையில் ஒவ்வொரு கூட்டத்திலும் இப்படிப்பட்ட பெரிய கூட்டத்தைப் பார்க்கிறேன். பத்து பேர் தெரிந்தவர்கள் என்றால், தெரியாதவர்கள் பல பேர்!

தெரிந்தவர்கள் நூறு பேர் என்றால் தெரியாதவர்கள் ஆயிரம் பேர்!

பழக்கமான முகம் நூறு என்றால், பழக்கமில்லாத முகங்கள் ஆயிரத்தைக் காண்கின்றேன், இப்படிப்பட்டவர்களை பட்டணமென்றாலும் பட்டிக்காடு என்றாலும் பார்க்கிறேன்.

நம் கூட்டமென்றால் கிராமத்து மக்கள் அனைவரும் கூடுகிறார்கள். பெண்களும், தாய்மார்களும், அரும்பு மீசை வாலிபர்களும், பெரியவர்களும் கூடுவதைப் பார்க்கிறேன்.

பத்து வருடத்திற்கு முன்பு கூட்டத்திற்கு போகிறேன் என்று பையன் அப்பாவிடம் அனுமதி கேட்டால்—

'கூட்டமா? அவனுங்க எதை எதையோ பேசுவானுங்க, போய் படி, அவங்களுக்கு வேறே வேலை இல்லை' என்று அவர் கூறுவார். இன்று உள்ள தகப்பன், நம் கூட்டத்து வால்போஸ்டரைப் பார்த்து கூட்டம் ஆறு மணிக்கு என்றாலும் ஐந்து மணிக்கே மகனுக்கு முன்னால் தந்தை புறப்படுகிறார். மகன், எங்கே போகிறீர்கள் என்று கேட்டால், கடை வீதிக்குப் போய் வரலாமென்று நினைக்கிறேன் என்று கூறுவார். மகனுக்குத் தெரியும் அப்பா எங்கே போகிறார் என்று.

இருவரும் கூட்டத்திற்கு வருகிறார்கள். மகனைப் பார்க்காமல் தந்தையும், தந்தையைப் பார்த்தும் பார்க்காமல் மகனும் இருக்கின்ற காட்சியை இங்கே பார்க்கிறோம்.

இது வளர்ச்சிக்கு அடையாளமா, காமராசர் சொல்லுவது போல் தேய்வுக்கு அடையாளமா?

ஏன் இது அவருக்குத் தெரியவில்லை? பாவம் ஆண்டவன் அவரை அப்படி இருக்க வைத்து விட்டான். அவருக்கு காலா காலத்தில் கல்யாணம் நடைபெற்று — பிள்ளை பெற்றிருந்தால் இந்தக் காட்சி அவருக்குப் புரியும்! அவர் ஒண்டிக் கட்டையாக இருப்பதால் தன்னைப் போல்தான் மற்றவர்களும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அவர் நினைப்பதுபோல் திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி இல்லை! கழகத்தின் வளர்ச்சியை பார்க்கும்போது எனக்கே பயமாக இருக்கிறது!

இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னாலே ஒரு நகராட்சி மன்றத்தில் போட்டியிடுவது பற்றி என்னைக் கலந்து பேச வந்திருந்தார்கள். திருச்சியிலும், கோவையிலும், காஞ்சியிலும் நம்மவர்கள் இருக்கிறார்கள். இதுவே போதும், போட்டி வேண்டாம் என்று அந்த நண்பர்களிடம் கூறினேன்.

இப்போது இருப்பதே போதும். இதுவே கொஞ்சம் அதிகம் என்று கருதுகிறன்!

இப்படிப்பட்ட வளர்ச்சியைக் கண்டும் காமராசர் 'ஒன்றும் இல்லை'! என்று கூறினால் அது லாபம்தான்!!

காமராசர், நாமும் கம்யூனிஸ்டும் சேர்ந்துவிட்டோம் என்று வேடிக்கை புரிகிறார்!

அப்போது நாங்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறினோம்.

கம்யூனிஸ்டுகள், இந்தியாவில் தனி உடமை இருக்கக் கூடாது என்று பொது உடமை வேண்டுமென்று கேட்டார்கள்.

சோஷலிஸ்ட்டுகள் நாட்டுப் பிரிவினை வேண்டாம் சமதர்மம் இருந்தால் போதும் என்றார்கள்!

சிவஞானம் டில்லியின் அதிகாரத்தை கொஞ்சம் குறையுங்கள் என்றார்!

அப்போது, காமராசர் கூறினார்!

தி. மு. கழகம் நாட்டுப் பிரிவினைக் கேட்கிறது, கம்யூனிஸ்டுகள் பொது உடமை நாடாக வேண்டுமென்கிறார்கள், சோஷலிஸ்ட்டுகள் சமதர்மம் வேண்டுமென்கிறார்கள், சிவஞானம் டில்லியின் அதிகாரத்தை

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd No M. [illegible]074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

நமது மேயர் பங்களா வாசி அல்ல- பளபளப்பான வாழ்வுக்கு சொந்தக்காரரல்ல !

ஏழைகள் துயர் துடைப்பதிலே நாட்டங் கொண்ட பண்பாளர் !

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

(அண்ணா பேச்சு)

குறைக்க வேண்டுமென்கிறார். இப்படி தனித்தனியே கூச்சல் போடுவதில் பயனில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து வாருங்கள் என்றார்.

இப்போது எல்லோரும் ஒன்றாகிவிட்டார்கள் போலிருக்கிறதே என்று கூறுகிறார்!

இப்பொழுது இங்கே நம் தோழர்கள் உண்டியலுக்குப் பதிலாக துணியை பிடித்துக் கொண்டு உங்களிடத்திலே பணம் கேட்டு வருகிறார்கள். போடுவதற்கு இஷ்டப்பட்டவர்கள் போடுகிறார்கள். போடுவதற்கு மனமிருந்தும் கையிலே பணமில்லாதவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டவர்களையும் நான் பார்க்கிறேன். அதை விட்டு, துணியை ஏன் எடுத்து வந்தாய், உண்டி எடுத்துவருவது தானே என்று சொன்னால்—

உடனே நம் தோழர், உண்டியை குலுக்கிக் கொண்டு போய் பணம் கேட்டால் 'என்னய்யா இது! பேசுகிறபேச்சைக் கேட்கும்போது இப்படியா சத்தம் போடுவது' என்று சொன்னால் என்ன அர்த்தம்? அவருக்கு போட இஷ்டமில்லை என்று அர்த்தம்?

அதைப்போல் காமராசரும் முன்னுக்குப்பின் முரணாக பேசி வருகிறார்! ஆகாத பெண்டாட்டிக்கு கைப்பட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம் என்பது போல் கட்சிப் பிடிக்காத காரணத்தால் அப்படி பேசுகிறார்! அப்படி அவர் சொன்னதால், கட்சிகள் ஒன்றாக சேர்ந்து விட்டதா? இதை அவர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

சட்ட மன்றத்தில் அன்பழகன் உணவுப் பிரச்னை குறித்து தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தார். அப்போது அமைச்சர் பகதவச்சலம் 'கம்யூனிஸ்ட்டுகள் புத்தி ாலிகள். அவர்கள் வீசிய வலையிலே இவர்கள் வீழ்ந்து விட்டார்கள். என்று கூறினார். அதேபோல் நான் ம.பொ.சி.யை பற்றி பேசினால், அண்ணாதுரை வலையில் ம. பொ. சி. வீழ்ந்து விட்டார் என்று கூறி ஒருவரைக் கொருவர் மோதவிடுவார்!

நிச்சயமாக அவர்களுக்கு சொல்லிக் கொள்வேன் 'எவர் விரிக்கின்ற வலையானாலும் அதற்கு கழகம் பலியாகாது !

ஒத்துப் போகும் விஷயத்தில் மட்டுமே ஒன்று சேர்வோம்!

'நிலச் சீர்திருத்தக் கொள்கை பற்றி சுதந்திரா கட்சியை பொறுத்த வரையிலும், தி.மு.க.வை பொறுத்தவரையிலும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே ஒருசமயம் சுதந்திரா கட்சியும் தி. மு. கழகமும் ஒன்று சேர்ந்து விடுமோ என்று சந்தேகிக்கிறேன் என்று நிதி அமைசசர் சி சுப்பிரமணியம் கூறினார்.

இப்படி நிதி அமைச்சர் கூறியதற்கு காரணம் ஆச்சாரியார் மீது சுப்பிரமணியம் கொண்டிருக்கும் பழைய பற்றும் பாசமும் தான் காரணமோ என்று சந்தேகிப்பதாக கூறினேன்!

'நாட்டுப் பிரிவினை ஒன்று தான் சுதந்திரா கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்தும் வித்தியாசம். அதனால் சந்தேகிக்கிறேன்' என்று கூறினார் நிதி அமைச்சர்.

அமைச்சர்கள் இப்படி சந்தேகப்படுவதை நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு அச்சமிருப்பது எனக்கு நல்லது; உண்மையிலேயே நான் வரவேற்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகமும் சுதந்திரா கட்சியும் ஒன்றாக சேர்ந்து விடுமோ என்று அச்சப்படுவதாக நிதி அமைச்சர் கூறுகிறார்.

ஆச்சாரியாரோ, கும்பகோணத்தில் பேசியதற்கு மாறாக திருச்சியில் பேசும் போது 'ஒரு காலததில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு, திராவிட முன்னேற்றக கழகம் இவை மூன்றும் ஒன்றாக இருக்கும். நான் தான் தனியாக இருப்பேன்' என்று கூறினார்.

சுதந்திரா கட்சியின் மனம் அலைகிறது. முஸ்லீம்கள் பகுதியில் முஸ்லீம்களே என்னோடு சேர்ந்து விடுங்கள் என்கிறார், வியாபாரிகளை பார்க்கும் போது வியாபாரிகளே என்னோடு சேர்ந்து விடுங்கள் என்றார்! பழைய காங்கிரஸ்காரரை பார்த்தால் என்னோடு சேர்ந்து விடுங்கள் என்று ஆட்களை சேர்ப்பதற்கு மனம் அலைகிறது.

சுதந்திரா கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒப்பந்தம் இல்லை யென்றாலும் ஒப்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகம் தான் இப்போது அமைச்சர்களிடத்திலே இருக்கிறது!

நாமும் சுதந்திர கட்சியும் ஒன்றாக சேர்வோம் என்று காமராசர் கருதினார்.

பத்திரிகையில் காமராசர் ஒரு மணி நேரம் பேசினார் என்று ஆச்சர்யப்பட்டு எழுதுவதாக கூறினேன். அவர் பேசும் ஒரு மணி நேரத்தில் கொஞ்ச நேரம் கம்யூனிஸ்ட்டையும், கொஞ்ச நேரம் திராவிட முன்னேற்றக் சமூகத்தையும், இன்னும்கொஞ்ச நெரம் சுதந்திரா கட்சியையும் தாககிப் பேசுகிறார். தனி தனியாக இருப்பதால் தானே இப்படி பேச வேண்டியிருக்கிறது, இந்த பாவிகள் ஒன்றுசேர்ந்தல் மொத்ததில் 'எல்லா பாவிகளும் ஒழிக!' என்று சொல்லி விடலாம் என்று காமராசர் நினைக்கிறார்!

காங்கிரசிலே இருக்கும் ஊழல் ராஜாஜிக்குத் தான் தெரியும். உங்களுக்கும் எனக்கும் என்ன தெரியும்? நாம் எதிர் வீட்டுக்காரர்களைப் போன்றவர்கள். அவர்கள் கை கழுவுகின்ற நேரம் எப்போது என்று அவருக்குத் தான் தெரியும்!

சுதந்திரா கட்சியை பணக்காரர்கள் கட்சி என்று சொன்ன போது மோதிலால் நேருவை காங்கிரசில் ஏன் சேர்த்தோம். கட்சிக்கு பணம் தேவை, அதனால் சேர்த்தோம் அது போலவே பணக்காரர்களை சுதந்திரா கட்சியில் சேர்க்கிறோம் என்று ஆச்சாரியார் பதில் சொன்னார்! அதற்கு இதுவரை காங்கிரஸககாரர்கள் பதில் சொல்லவில்லை.

ஆச்சாரியார் சொன்ன பதிலை ஆசைத் தபபியோ, மேயரோ சொன்னால் 'ஆஹா அப்படியா பேசினார்கள்' என்பார்கள்.

டில்லியிலே அதிகாரியாக இருந்த வி பி: மேனன் எட்டு மந்திரிகள் மீது லஞ்சக குற்றச் சாட்டு இருக்கிறது அதற்கு ஆதாரங்களை திரட்டினேன். அவர்கள் மீது வழக்குப் போட்டால் கட்டாயம் ஆளுக்கு ஐந்து வருடம் திட்டி விடுவார்கள். அப்படிப்பட்ட வழக்கு என்னிடம் இருந்தது, காங்கிரஸ் மந்திரிகள் தண்டிக்கப்பட்டால் காங்கிரசுக்கு இழுக்கு என்று நினைத்து வழக்கு போடாமல் விட்டு விட்டார்கள் என்று கூறியிருக்கிறார்.

அவர் சொன்னக் குற்றச் சாட்டு தவறு என்றால், விக்ரமாதித்தன் காலத்தில் மந்திரியாக இருந்த பட்டியாவது கொஞ்சம் ஊழல் செய்திருப்பான் நாங்கள் மந்திரி பதவியை கொஞ்சமும் களங்கமின்றி வகித்து வந்திருக்கிறோம் என்று அவர் மீது மான நஷ்ட வழக்கு தொடர்ந்திருக்கலாம். ஆனால் வழக்கு தொடர வல்லை!

கொஞ்சமாவதுசூடு சொரணை இருக்குமானால். அக்கரை இருக்குமானால்வி,பி.மேனன்சொன்ன குற்றச் சாட்டுகளை மறுத்து பேசுவது தானே!

இதையே நான் சென்னையில் இரண்டு இடங்களில் சொல்லியிருக்கிறேன். மூன்றாவதாக இந்த இடத்திலும் சொல்லுகிறேன்!

பூசாரிக்குத் தான் தெரியும் அம்மன் வரம் தருமா, தராதா என்று! வீட்டில் பெரிய பையன் ஊமையாக இருக்கிறான். மகளுக்கு கண் குருடு. இந்தக் குறையை போக்கும்படி பூசாரியின் மனைவி அம்மனை வேண்டிக் கொண்டால் பூசாரி அம்மனைப் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கிறானோ அதைப்போல்ஆச்சாரியார் காங்கிரசின ஊழல்களை அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்

ஆச்சாரியார் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பீஸ் வாங்காத வழக்கறிஞர். ஒரு கூட்டத்தில் கூறினேன் ஆச்சாரியர் விதை விதைக்கிறார், பலனை அனுபவிக்கப் போகிறவர் அவரல்ல நாம் தான் என்று,

ஆச்சாரியாரின் சுதந்திரா கட்சியால் காங்கிரசுக்குத் தான் வீழ்ச்சியே தவிர, நமக்கல்ல! இரண்டு காங்கிரஸ்காரர்கள் ஒன்றாக சந்தித்தால்—இருவரும் சந்தேகத்தோடு பார்த்துக் கொள்வார்கள்! ஒருவர் மெள்ள 'என்ன நீங்கள் சுதந்திரா கட்சிக்கு போய் விடுவீர்களா?' என்று கேட்டால்.

மற்றொருவர்–'சே! சே! இந்த தேர்தலில் காங்கிரஸ் டிக்கட் கொடுக்கா விட்டால் போகத் தான் போகிறேன்என்பார். இப்படி காங்கிரசுக்குள்ளே பிளவு உண்டாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை நானா நழுவ விட்டு விடுவேன் ?

எனக்கு தெரியும் யாரைக் கொண்டு யாரைக் தாக்கலாமென்று! எனக்கு இருக்கின்ற வலிவு மினிமம்! அவர்களுக்கு இருக்கின்ற வலிவு மாக்ஸிமம். அவர்களிடத்திலே இருந்து வலிவை எடுத்துக் கொள்ள முடியும்!

நேரு ஒரு கூட்டத்தில் பேசும் போது ராஜாஜியின் கட்சியில் என்ன திட்டமிருக்கிறது என்று கேட்டார், அதற்கு சுருக்கமாக ராஜாஜி, துப்பாக்கி ஏந்தி வருகின்றவனைப் பார்த்து 'உனக்கு என்ன திட்டம்' என்று புலி! கேட்டால்.

'உன்னை சுடுவது தான் என் திட்டம்' என்று சொல்லுவது போல் உன்னை ஒழிப்பது தான் என் திடடம் என்றார்!

காமராசர் என்றும் பதில் பேசவில்லை. என்ன இருந்தாலும் காங்கிரஸ் மீது எவ்வளவு கோபம் இருந்தாலும் ஆச்சாரி

(7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ்.இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை